பக்கங்கள் : 12+IV =பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (03-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:248

# நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்காக மேலும் விட்டுக்கொடுப்புகளுக்கு தயார்

## சம்பூரில் தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

திருகோணமலை,ஒகஸ்ட்3

**"நிரந்தர சமாதானம் தோன்றுவதற்காகவும் எமது மக்கள் எதிர்பார்க்கும் விடியல் கிட்டுவதற்காகவும் மேலும் விட்டுக்கொடுப்புகளைச் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம்."**

**- இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

திருகோணமலை, சம்பூரில் வெள்ளி இரவு மறவர் படையினருக்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் தமிழ்ச்செல்வன் இப்படிக் கூறினார்.

சம்பூர் போர்ப் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் நடந்த இக்கூட்டத்தில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.திலக், மூதூர் கோட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்ச்செல்வன் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின்

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று சம்பூருக்கு விஜயம் செய்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்து தற்போதைய அரசியல் கள நிலைவரம் குறித்து விளக்கினார்.

### குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம்:

## புலிகளின் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கிறது கண்காணிப்புக் குழு

கொழும்பு,ஒக.3

திருகோணமலை குரங்குபாஞ்சானில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாம் தொடர்பான அவர்களின் உத்தியோகபூர்வ பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உப தலைவர் ஹெக்லண்ட் தெரிவித்தார்.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றும்படி விடுதலைப் புலிகளுக்கு பல தடவைகள் தெரிவித்துவிட்டோம் என்றும் -

இது தொடர்பான சாதகமான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றும் - அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பான கலந்துரையாடல்களிலும் தனிப்பட்ட விடயங்களிலும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(12ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக

## யாழ்ப்பாண மக்களைச் சந்தித்து கருத்தறிய தமிழ்ச்செல்வன் திட்டம்

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு முன்வைத்துள்ள வரைவு குறித்து யாழ். மக்களின் கருத்தையும் அறிவதற்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திட்டமிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர், அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் புத்திஜீவிகள் மற்றும் பலதுறைசார்ந்தவர்களையும் தமிழ்ச்செல்வன் சந்திக்க இருக்கின்றார்.

இச்சந்திப்புக்கள் பெரும்பாலும் பளையில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசின் வரைவு மற்றும் சமகால நிலைமை ஆகியன குறித்து மக்கள் கருத்தை அறியவே தமிழ்ச்செல்வனின் இச்சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதி தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம்,ஒக.3

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதி ஒருவர் காவலுக்கு இருந்த சிறை அலுவலரை ஏமாற்றிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

கொடிகாமம் மற்றும் சாவகச்சேரிப் பகுதியில் 300இற்கும் அதிகமான மாடுகளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கார்த்திகேசு இராஜேந்திரம் என்ற கைதியே வைத்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறையின் 24 பேர் நேற்று மட்டக்களப்பு சென்றனர்

கிளிநொச்சி,ஒக.3

கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த 24 பேர் நேற்று சனிக்கிழமை முதற்றடவையாக, தரைவழியாக மட்டக்களப்பைச் சென்றடைந்தனர்.

ஓமந்தையில் இருந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும் இராணுவத்தின் பாதுகாப்புடனும் இவர்கள் மட்டக்களப்பிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

மட்டு.மாவட்டத்திற்கான முதற்றொகுதி (12ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு,ஒக.3

கண்டியில் இன்று இடம்பெறும் எசல பெரஹராவையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் 7 ஆயிரம் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

நாட்டில் சகல பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் கண்டியில் பெரஹராவைக் காண ஒன்று கூடுவது வழமை. (ம-3)

### வரலாற்றுப் புகழ் மிக்க

# நல்லூர்க் கந்தன் ஆலய கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.3

வரலாற்றுப் பெருமைமிகு நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.


எதிர்வரும் 28ஆம் திகதி வரை 26 நாள்கள் திருவிழா தொடர்ந்து இடம்பெறும்.

12ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு மஞ்சமும் 20ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கார்த்திகை உற்சவமும், 22ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கைலாச வாகனமும், 25ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு சப்பறமும், 26ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும்; 27ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், 28ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பூங்காவனமும் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் வழமைபோன்று தெய்வீக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களின் வசதிகருதி சாரணர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர், மக்கள் நலன்புரிச் சங்கப் படையணியினர், விசேட செயலணியினர் மற்றும் தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் சேவையில் ஈடுபடவுள்ளனர்.

இன்றைய கொடியேற்றத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொள்வார்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் இன்றைய கொடியேற்றத்துக்காக நேற்றுக் காலை கொடிச் சேலை எடுத்துவரப்பட்டு வாயிலில் இறக்கப்பட்ட காட்சி.

### நல்லூர் உற்சவ காலத்தில்

# கலாசார சீரழிவுகளைத் தடுக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்

## சிறப்புச் செயலணியின் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஒக.3

நல்லூர் ஆலயச் சூழலில் இடம்பெறக்கூடிய சமூக கலாசார சீர்கேடுகளையும் திருட்டுச் சம்பவங்களையும் தடுப்பதற்கு இளைஞர் சமூகம் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளரும் நல்லூர் உற்சவ கால சிறப்புச் செயலணியின் தலைவருமான சி.வி.கே.சிவஞானம்.

நல்லூர் உற்சவ கால பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டர் அமைப்புக்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே சிவஞானம் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஆலய உற்சவத்தின்போது தடைமுகாம்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தபோதும் குறிப்பிட்ட சில இளைஞர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானிய அமைச்சர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,ஒக.3

ஜபபானின் சிரேஷ்ட பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெட்சுவோ யானோ தலைமையிலான உயர் மட்டக்குழு இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

குறுகியநேர விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரும் யானோவுடன் வெளிவிவகார உதவி அமைச்சர் ஹமஹேற, ஜப்பானிய தூதர் ஒட்சுகா, வெளிவிவகார அமைச்சின் மேற்காசிய பிரிவுப் பணிப்பாளர் யமதா ஆகியோர் வருகின்றனர்.

யுனிசெவ் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி கெட்சைபனும் இவர்களுடன் வருகிறார்.

காலை 10.00 மணிக்கு பலாலி வந்தடையும் குழுவினர் முதலில் இணுவில் பகுதியில் உள்ள அகதிமுகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலை குறித்துக் கேட்டறிவர்.

அதன்பின்னர் ஜப்பான் நிதி உதவியுடன் யுனிசெவ் அமைப்பு கொழும்புத்துறைப் பகுதியில் மேற்கொள்ள இருக்கும் தாய்-சேய் நலத் திட்டத்தை யானோ ஆரம்பித்துவைப்பார். (12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வெடிமருந்து ஏற்றிய டிரக் மோதியது

# ரஷ்ய இராணுவ மருத்துவமனை குண்டுத் தாக்குதலில் தகர்ந்தது!

### நூற்றுக்கு மேற்பட்டோர் பலி!

மொஸ்கோ,ஓக.3

ரஷ்ய இராணுவ வைத்தியசாலை ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் எனவும் 35 பேர் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் மொஸ்கோவிலிருந்து பத்து கி.மீ.தூரத்தில் அமைந்திருந்த இந்த வைத்தியசாலை மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட டிரக்கை மோதவைத்து செச்சினிய தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

வைத்தியசாலையின் பிரதான வாயிலூடாக டிரக்கை வேகமாக செலுத்திய ஒருவர் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவந்த கட்டடத் தொகுதி நெருங்கியதும் தன்னையும், டிரக்கையும் வெடிக்கவைத்ததாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடித்த நான்கு மாடி கட்டடங்களை கொண்ட இந்த வைத்தியசாலை தரைமட்டமாகியுள்ளது. இச்சம்பவம் நடக்கும் போது வைத்தியசாலையில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இருந்துள்ளனர்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் இராணுவத்தினரை மீட்கும் பணிகளில் 650 படையினர் ஈடுபட்டுள்ளனர்.

செச்சினியர்களின் அட்டூழியம் இது என்று கண்டித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இதற்கு தகுந்த பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சூளுரைத்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும், இந்த சம்பவத்தில் பொதுமக்கள் சிலரும் உயிரிழந்துள்ளனர் என்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

செச்சினிய தீவிரவாதிகளின் இலக்காக இராணுவ வைத்தியசாலை குறிவைக்கப்பட்டிருப்பது ரஷ்ய பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் செயல் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## 3ஆயிரம் கிலோ எடையில் இராட்சத சொக்கிலேட்

எல்லோரையும் பிரமிக்க வைக்கும் வகையில் 3,068 கிலோ எடை உள்ள இராட்சத சொக்கிலேட்டை நியூயோர்க் நகரில் உள்ள ஹர்சாய் உணவு நிறுவனம் தயாரித்து இருக்கிறது. குழந்தைகளுக்கு சொக்கிலேட் வாங்கிக் கொடுத்திருப்பீர்கள். அது சுமார் 10 கிராம் எடை இருக்கும் - ஆனால் எல்லோரையும் பிரமிக்கவைக்கும் வகையில் 3ஆயிரத்து 68 கிலோ எடை உள்ள இராட்சத சொக்கிலேட் தயாரிக்கப்பட்டு உள்ளது. அதன் உயரம் 6 அடி 6 அங்குலம் ஆகும். 53 அடுக்குக் கொண்டது. இவ்வளவு எடையுள்ள சொக்கிலேட் எதற்கு? என்றால் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்கத்தான். (ஐ)

## கையேடு வெளியீடு

கிளிநொச்சி,ஓக.3

விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்ப் பெயர்க் கையேடு நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ நிதிப் பொறுப்பாளர் செ. வ.தமிழேந்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சதா தனபாலசிங்கம் வரவேற்புரையையும் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவர்.

க.இளங்கோவன், வே.பரமநாத பிள்ளை ஆகியோர் நூலை வெளியிட்டு வைப்பர்.

கலாநிதி க.சொக்கன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், வீ.பரந்தாமன் ஆகியோர் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவர். (ம-3)



நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் 'கலாசூரி' என்.கே.பத்மநாதனின் திருவுருவப்படத்தை நல்லை ஆதீன முதல்வர் திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

# 'நியாப்' திட்ட நிதி குடாநாட்டில் குறைக்கப்பட யார் காரணம்?

## விளக்குகின்றது அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

**யாழ்.குடாநாட்டில் செயற்படுத்தப்பட்டுவரும் 'நியாப்' திட்டத்தின் நிதி ஒதுக்கீடு திடீரென 32 கோடி ரூபாவால் குறைக்கப்பட்டதற்கான காரணம் என்ன? அதனை சம்பந்தப்பட்டவர்கள் விளக்கவேண்டும் என்று தெரிவித்து 26.07.2003 உதயன் பத்திரிகையில் 'வாசகர் திருமுகம்' ஒன்று பிரசுரமாகி இருந்தது.**

**இது தொடர்பான விரிவான விளக்கம் ஒன்றை யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அனுப்பிவைத்துள்ளது. அந்த விளக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

உலக வங்கியின் 'நியாப்' திட்டம் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் 8 மாவட்டங்களிலும், எல்லைப்புற மாவட்டங்களான அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம், மொனராகலை ஆகிய நான்கிலும் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2000ஆம் ஆண்டில் திட்டம் நடைமுறைக்கு வந்தபொழுதிலும், யாழ். மாவட்டம் 2002ஆம் ஆண்டிலேயே 'நியாப்' திட்டத்தில் இணைக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டில் குடாநாட்டில் 30 கிராமங்களை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டது. முதலில் பரீட்சார்த்தரீதியில் பத்து நீர்ப்பாசன வேலைகள் 10 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தேர்தெடுக்கப்பட்டன. அதில் 7குளங்களும், 3 உவர் நீர்த்தடுப்பு அணைகளும் அடங்கின. இவற்றின் நிர்மாண வேலைகள் ஒப்பந்த அடிப்படையில் விவசாய அமைப்புகளிடம் கொடுக்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட குளங்கள் 5இல் வேலைகள் 2002 கோடையில் ஆரம்பிக்கப்பட்டன. செப்ரெம்பர் மாதம் முதல் இணையத் தொண்டர்கள் வேலைகளை பார்வையிடத் தொடங்கினர். ஒக்ரோபர் 7ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடந்த 'நியாப்' கூட்டத்தில் 4 குளங்களில் பொறியியல் நியமத்துக்கு எதிர்மாறாகவும், மிகவும் தரக்குறைவாகவும் மேற்கொள்ளப்பட்ட கட்டுவேலைகள் பற்றி இணையப் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்தனர்.

கப்புது - நெடுங்கிராய்க் குளத்தினால் எவ்வித பயனும் கிடைக்காது எனவும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

குளங்கள், மையக்கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்ட முறையிலுள்ள குறைபாடுகளும் விளக்கப்பட்டது. இதனையடுத்து வேலைகளைத் தரமாக மேற்கொள்ளும்படி அரசஅதிர் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். குளங்கள், கிராமங்கள் முதலியவற்றை சீரானமுறையில் தெரிவு செய்வதற்குரிய சிபார்சுகளைச் செய்ய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

அக்கூட்டத்தின் பின் இரு வாரங்களாக வேலைகள் துரிதமாக நடைபெற்றபொழுதிலும், வேலையின் தரத்தை மேம்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இச்சீர்கேடான நிலையை திருத்த வேண்டும் என்ற நோக்கில் திருகோணமலையில் உள்ள 'நியாப்' திட்டப் பணிப்பாளருக்கு ஒக்ரோபர் 21ஆம் திகதி யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முறைப்பாடு செய்தது. ஒருகிழமைக்குள் தொழில்நுட்பப் பரிசோதகர்களை அனுப்பி தரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

ஆனால், நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இம்முக்கியமான விடயத்தில் அதிகாரிகள் அனைவரும் இணைந்து முறைப்பாட்டைத் தட்டிக்கழிக்கும் போக்கு நன்றாகத் தெரிந்தது.

அதனால் இந்த விடயத்தை உலக வங்கியின் பொறியியலாளருக்கு அறிவிக்கவேண்டும் என்ற தீர்மானம் எமது அமைப்பால் எடுக்கப்பட்டது.

'நியாப்' திட்டப்பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை அவருக்கு அனுப்பினோம். அவர் திட்டப் பணிப்பாளரை நடவடிக்கை எடுக்கும்படி பணித்தார். அதன்பின்பே சில அதிகாரிகளும், தரக்கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பானவர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கினர். ஆனால், அதிக காலம் தாழ்த்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

2002 நவம்பர் மாதம் உலக வங்கியின் பிரதிநிதிகள், இங்கு மேற்கொண்ட குள வேலைகளைப் பார்வையிட்டனர். பல குறைபாடுகளை அவர்களே நேரில் கண்டார்கள். பின்பு அநுராதபுரத்தில் 12 மாவட்டங்களின் மதிப்பீட்டிற்கென இடம்பெற்ற வேலைப் பட்டறையில் யாழ்.மாவட்ட திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும், எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டினர். அவற்றுள் சில வருமாறு:-

★ பொறியியல் வேலைகளின் தரம் மிகவும் குறைவு.

★ மற்றைய மாவட்டங்களில் கடைப்பிடிக்கப்பட்ட திட்ட வடிவமைப்பு இங்கு பொருத்தமற்றதாக காணப்படுகிறது. உதாரணமாக அங்கு ஒரு குளத்தினால் ஒரு கிராமம் முழுப் பயன்பாடு அடையும் நிலை. இங்கு குளத்தை அண்டிய வயல் பிரதேசங்களில் பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த பயனாளிகள் இருந்தனர். அதனால் குளத்தோடு இணைந்த மையக் கிராமத்தை தெரிவுசெய்வது பிரச்சினையைத் தோற்றுவித்தது.

★ அங்குள்ள குளங்களும் இங்குள்ள குட்டைகளும் பொறியியல் தத்துவத்தில் வித்தியாசமானவை. அதனால், அவற்றைத் தெரிவுசெய்வதிலும், வடிவமைப்பதிலும் வித்தியாசமான அணுகுமுறையைப் பேண வேண்டும்.

★ மக்களின் ஜீவனோபாய ஆதரவுத் திட்டத்தின் பல அம்சங்களுக்கிடையேயான விகிதாசாரம் அல்லது முன்னுரிமைப்படுத்தலுக்கு தெளிவான வழிகாட்டல் இன்மை.

★ இங்குள்ள கிராமிய சமூக பொருளாதார நிலைக்குகந்த சமூக அணிதிரட்டல் வழிமுறை பற்றிய குழப்பநிலை.

★ நிலத்தடி நீரைப் பெருக்குவது பற்றிய பொருத்தமான திட்ட வழிகாட்டல் இன்மை.

★ திட்டத்தின் இறுதி இலக்கை அடைவதற்கு திட்ட அமுலாக்கம் முடிந்த பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் என்பன அங்கு சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள்.

ஆரம்ப திட்ட வடிமைப்பில் ஏற்பட்ட இடைவெளிகள், சிக்கல்கள் காரணமாகவும் அமுலாக்கலின் பொழுது பொறியியல் நியமங்கள் கடைப்பிடிக்கப்படாமையினாலும் முதல் பத்து வேலைகள் தவிர்ந்த ஏனையவற்றை இடைநிறுத்துவதென பட்டறையில் தீர்மானிக்கப்பட்டது. இதை இங்கிருந்து சென்ற அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டனர். எதிர்த்து வாதாடியதாகத் தெரியவில்லை.

அத்தோடு,துரித மதிப்பீட்டு ஆய்வுக் குழு ஒன்றை நியமித்து மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு அக்குழுவின் சிபாரிசைப் பெற்று, அதன்படி திட்டத்தை தொடரலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அரசசார்பற்ற இணையத்தின் பிரதிநிதிகள் அநுராதபுரம் பட்டறையில் பங்குபற்றவில்லை. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கும் இணையத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வேலைகளை இடைநிறுத்தும்படி எப்போதாவது இணையம் கேட்கவுமில்லை.

1995ஆம் ஆண்டிலிருந்து யாழ். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளியுலகில் பிரசாரம் செய்து பல்வேறு வளங்களைத் திரட்டும் முயற்சியில் இணையம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

ஆகவே, கிடைத்த வளத்தைத் தடுக்கவோ அல்லது திருப்பி அனுப்பவோ நாம் சிந்திக்கவேயில்லை. ஆனால், கிடைக்கும் வளங்களை சமூக மேம்பாட்டிற்கும், பிரதேச அபிவிருத்திக்கும் பயன்படுத்தவேண்டுமேயொழிய திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களின் நலனுக்கு பயன்பட இடமளிக்கக்கூடாது.

மேற்குறிப்பிட்டுள்ள உண்மைகளை மறைத்து சில அதிகாரிகள் தமது குறைகள் வெளிவராவண்ணம் தடுப்பதற்காக இணையத்தின் அறிக்கையினாலேயே 'நியாப்' வேலைகள் நிறுத்தப்பட்டது என பொய்ப்பிரசாரம் செய்தார்கள்.

2003 ஜனவரி மாத இறுதியில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற 'நியாப்' கூட்டத்தில் திட்டத்தின் நிலை பற்றி அறிவிக்கப்பட்டது. துரித மதிப்பீட்டு ஆய்வு வேலைகள் யாழ். பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்கப்பட்டதாகவும் ஆய்வுக்குழுவின் அங்கத்தவர்கள் பெயர்களும் சபையோர்க்கு அங்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஆய்வுக்குழு மேற்கொள்ளவேண்டிய பணியின் விவரமும், பொறுப்புகளும் மார்ச் மாதமே அதற்குக் கொடுக்கப்பட்டன. மார்ச் மாதம் 10ஆம் திகதி குழு தனது ஆரம்ப அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஒரு சுருக்கமான இடைக்கால அறிக்கை மார்ச் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டது. விரிவான இடைக்கால அறிக்கை ஏப்ரல் 21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மே மாதம் 22ஆம் திகதி யாழ். செயலக கேட்போர்கூடத்தில் திட்டத்தோடு தொடர்புடைய அனைவரையும் அழைத்து வேலைப்பட்டறை நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் தமது அறிக்கைகளை சுருக்கமாக சமர்ப்பித்தனர். பங்குபற்றியோர் குழுக்களாக பிரித்து, குழு நிலையில் கலந்துரையாடல் நடத்தி சிபார்சுகள் முன்மொழியப்பட்டன. இவற்றை உள்வாங்கி இறுதி நகல் அறிக்கை குழுவினால் தயாரிக்கப்பட்டு ஜூன் 01ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

உலக வங்கியின் பிரதிநிதிகள் ஜூன் 2003 முற்பகுதியில் யாழ். மாவட்டத் திட்டச் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். பின்பு 12 மாவட்டங்களுக்குமான மதிப்பீட்டு வேலைப் பட்டறை அநுராதபுரத்தில் நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே அமுல் செய்யப்படும் பத்து வேலைகளையும், தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது பத்து வேலைத்திட்டங்களையும் தொடரலாம் என அறிவிக்கப்பட்டது. அத்தோடு யாழ். மாவட்டத்தின் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த திட்ட முகாமைத்துவ அலகு விரும்பினால் அது மொத்த நிதி ஒதுக்கீட்டிற்குட்பட்டதாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தை மேற்கொண்டு, முடிக்கக்கூடிய தொழில்நுட்ப ஆற்றல் யாழ்ப்பாணத்தில் உண்டா என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. ஏனெனில், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ள தொழில்நுட்பத்திறன் 20 வேலைத்திட்டங்களுக்கே போதுமானது என உலக வங்கியின் பிரதிநிதிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களினாலும், முழு 'நியாப்' திட்டத்திலும் ஏற்பட்ட நிதி நெருக்கடியினாலும் யாழ். திட்டத்தின ஒதுக்கீடு ரூ.40 கோடியில் இருந்து ரூ.8 கோடியாகக் குறைக்கப்பட்டது.

'நியாப்' திட்டப் பணிப்பாளரிடம் இது தொடர்பான முழு விவரங்களையும் இணையம் கோரியுள்ளது. ஆனால், இதுவரை பதில் ஏதும் கிடைக்கவில்லை.

★ 'நியாப்' திட்டத்தில் நிதி நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது?

★ யாழ்ப்பாணத் திட்டத்திற்கு சென்ற வருடம் 40 கோடி அங்கீகரிக்கப்பட்டபொழுது உண்மையில் நிதி ஒதுக்கீடு இருந்ததா?

★ நிதி நெருக்கடியை காலம் தாழ்த்திக் கண்டுபிடித்தாலும் அதை முழுமையாக யாழ். மாவட்டத்தில் இருந்து ஏன் வெட்டவேண்டும்? அதாவது 32 கோடி ரூபாவை ஏன் வெட்ட வேண்டும்.

★ 32 கோடி பற்றாக்குறையை ஏன் மற்றைய மாவட்டங்களின் 2004 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் இருந்து வெட்டமுடியாது?

இவற்றிக்குரிய விளக்கங்களை திட்ட முகாமைத்துவ அலகு பத்திரிகை வாயிலாக பொதுமக்களுக்கு அறிவிக்கவேண்டும்; அதனை அவர்கள் செய்வார்களா?

துரித மதிப்பீட்டு ஆய்வுக்குழுவின் அறிக்கையினாலேயே நிதி வெட்டப்பட்டது என திட்டக் கிராமங்களில் சில அதிகாரிகள் பிரசாரம் செய்தனர். ரூபா 50 கோடியாக இருந்த மதிப்பீட்டை ரூபா 63 கோடியாக அதிகரிக்க வேண்டுமெனவே ஆய்வுக்குழு சிபார்சு செய்தது. அத்தோடு இடைநிறுத்தப்பட்ட வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் எனவும் அது வலியுறுத்தியது - என்றுள்ளது. ★

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | சூ. வெ. |
| | | | வியா. புதன் |
| | கே. | | சந். |

# இந்த வார இராசி பலன்

## 03-08-2003 - 09-08-2003

**மாற்றம்:**

அத்தம் சந்திரன் கன்னி இராசியில் நிற்கும்.

அரசியலில் புதிய பேச்சு, வெளிநாடுகளின் அழுத்தத்தால் அரசு யோசனை செய்யும். 'குருக்கள் சம்மதித்தாலும் பூசாரி விடமாட்டார்' என்ற நிலை இருக்கும். பொருளாதார மாற்றங்கள் ஏற்பட வழி உண்டு. தெற்கு அரசியல்வாதிகளிடையே குழப்ப நிலை ஏற்படலாம். இந்தியாவுக்கு அமெரிக்க உதவிகள் கிடைக்கும். மத்திய கிழக்கில் தொடர்ந்து யுத்த அலை அழிவுகளைக் கொடுக்கும். இந்துசமுத்திரம், பசுபிக்சமுத்திர நாடுகளில் இயற்கையின் மாற்றக் காலபோக நிலைமாறிச் சில நாடுகளில் அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

வசதியுள்ளவர்கள் கல்யாண மண்டபங்களைக் கட்டிவிடுங்கள். ஆறு மாதத்திற்கு முன்பு பதிவு செய்தால்தான் இப்பொழுது கல்யாணமே செய்யலாம் போலிருக்கிறது. காசிருந்தால் கல்யாணம் தானே நடக்கும் காலமாகும். குடும்பச் செலவு கட்டுமீறும். முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் எதையும் செய்வீர்கள். சங்கீதம், ரீ.வி., சினிமா எனச் செலவுவரும். புதிய திட்டங்களால் வெற்றிவரும். தூர இடங்களுக்கு பிரயாணங்கள் செய்வதிலிருந்து தவிர்த்து நடவுங்கள். கால் உளைவு, நாரிப்பிடிப்பு வரும். விவசாயிகளுக்கும், பாதுகாப்புத் துறையினருக்கும் இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### இடபம்

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டுப் பதற்றப்படுவீர்கள். குடும்பத்தில் வாக்குவாதம் வரும். எதிர்ப்பாலார்கள் தொல்லை கொடுப்பார்கள். வருமானத்தில் ஒரு நெருக்கடி வரும். மாணவர்களுக்கு கல்வியில் அசட்டை ஏற்படும். வீடு, வாசலில் வசதிகள் தேட முற்படுவீர்கள். வயிற்று நோ, உஷ்ண பீடைகள் வரும். மருந்து வியாபாரிகள், தோட்டக்காரர்கள் நன்மை அடைவார்கள். தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மிதுனம்

ஜென்மத்திரிய நாள்களிலும், அட்டம ராசி நாள்களிலும் முகூர்த்தம் வைத்தால் திருமணம் செய்யும் அந்தக் குடும்பம் துன்பப்படும். பிரிவு கூடக் கொடுக்கலாம். சந்தர்ப்பமறிந்து காரியங்களை நேரகாலம் பார்த்துச் செய்து வெற்றி அடைவீர்கள். பொருள் வரவு ஏற்படும். வீடு மனையில் ஒருவர் சொல்வதை மற்றவருக்குச் சொல்லாமல் இருப்பதே மேலாகும். வீணாகப் பிறருக்கு உதவிகள் செய்வதற்காக ஓடியாடித்திரிந்து வீண்பழி கேட்க நேரிடலாம். மாணவர்களுக்கு சோதனைகள், வேதனைகளைக் கொடுக்கும். வாய்வு, பித்தரோகம் கொடுக்கும். வியாபாரிகள், அச்சுவேலை செய்பவர்களுக்கு இலாபங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### கடகம்

காதலில் தோற்ற எத்தனையோ பேர்கள் வாழ்க்கையில் வெற்றி கண்டுள்ளார்கள். வாழ்க்கையில் ஜெயித்தவர்கள் எல்லோரும் காதலித்தா கலியாணம் செய்துள்ளார்கள். அவரவர் உறுதிநிலைகளில் தான் வெற்றி தங்கியுள்ளது. உங்கள் முயற்சியால் பொருள் வரவு ஏற்படும். புத்திரராலோ, சகோதரங்களாலோ துன்பங்கள் வரும். நெஞ்சு வருத்தம், தும்மல், சளி, தலைச் சுற்று, பித்தவியாதி வந்து போகும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். அரசியல் துறை, குருத்துறை, இலக் கியத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்க இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### சிங்கம்

அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களைத்தக்க வைப்பதற்காக எப்படியெல்லாம் மாறுகிறார்கள். தொழில்ஸ்தானத்தில் வாக்குக்கலகம் வரஇடமுண்டு. பொருளொன்று இடம்மாறி வேதனை கொடுக்கும். பொருள் செலவு அதிகரிக்கும். இனஜனவருகை, பிரயாணச்சிறப்பு கொடுக்கும். புதிய மனை, இடம்அமைக்க யோசனைவரும். நெஞ்சுவலி, உஷ்ண பீடைகள் கொடுக்க இடமுண்டு. வியாபாரிகள், தோட்டக்காரர்கள், குருத்தொழில் செய்பவர்களுக்கு விட்டுவிட்டு பொருள் கொடுக்கும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### கன்னி

எல்லாம் பயபக்திதான். இந்த உயிர் பூச்சிக்காக எத்தனை போராட்டம். இவ்வுலகில் அரசியலில் வன்செயல்கள் எந்தக் காலத்திலும் ஒரு வெற்றியைத் தராது. அதேபோன்று தொழில்ஸ்தானத்திலும் வன் செயற்பாடுகளால் விடிவு வராது. எனவே, அன்பு கொண்டு செயற்பாடுகளைச் செய்து மற்றவர்களின் உள்ளங்களில் இடம் பிடிக்க நீங்கள் முயலுவீர்கள். பொருள் வரவு சுமாராக இருக்கும். மாற்றங்கள் சகஜம். பன்னிரண்டில் வியாழன் இருப்பதால் அடிக்கடி பொருள் இழப்புகள் ஏற்படும். கால் பிடிப்பு, உளைவு, பித்தக்கலக்கம் என்பன கொடுக்கும். சங்கீதக் கருவிகள் பாவனைப்படுத்துபவர்கள், ரீ.வி., வீடியோ விற்பனை, குருத்துறை, வியாபாரிகளுக்கு மாற்றங்கள், நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### துலாம்

மனித வாழ்க்கையில் பிரச்சினைகள் ஒருதொடர் கதைதான். எங்கு போனாலும் எமது பலனின்படிதான் வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கும். எனவே, எதிர்நிலைப் போராட்டங்களால்தான் பல நன்மைகள் கொடுக்கும். பொருள் செலவுகள், இடமாற்றங்கள், பிரயாணங்கள் கொடுக்கும். தூர இடங்களிலிருந்து செய்திகள் வரும். பொருள்கள் தவறலாம். கொடுத்த பொருள் வராது. இடமாற்றம் நன்மை தரும். கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். ரீவி., டெக், சட்டத்துறை, குருத்தொழில், வியாபாரிகள் போன்றவர்களுக்குப் பல மாற்றங்கள் ஏற்படும். நன்மைகளால் குடும்பத்தினருக்கு மாற்றங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### விருச்சிகம்

தவறு செய்தவர்கள் திருந்தி நடக்க, தொடர்ந்து தவறுகள் செய்கின்றவர்கள் தடுக்கபடிதான் இருப்பார்கள். எனவே, தொழில் ஸ்தானத்தில் உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள். கலகலப்பான காலமாகும். பத்தில் வியாழன் பல மாற்றங்களுக்கு வித்திடும். உறவினர்கள் வீண் பழி சுமத்துவர். பல இடங்களுக்கு ஓடி ஓடித் திரிவீர்கள். உயரதிகாரிகள், தெய்வ பக்தி கொண்டவர்கள் உதவுவார்கள். பொருள்கள் களவு போகலாம். கவனமாக இருக்கவும். சளி, விறைப்பு, நாசிவருத்தம் கொடுக்கும். வியாபாரிகள், சட்டத்துறையினர், தொழில்நுட்பத் தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### தனுசு

தெய்வ வழிபாட்டால் மனித வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை பிறக்கின்றது. நல்லூர் முருகனை வழிபாட்டால் உள்ளம் திறக்கின்றது. தெய்வவழிபாடு, திருப்பணிச் சேவைகள் தொடரும். தொழில் ஸ்தானத்தில் வரவேற்பு இருக்கும். பொருள் வரவு கொடுக்கும். நண்பர்கள் உதவுவார்கள். இடமாற்றங்கள் சகஜம். தூரதேசச் செய்திகள் நிறைவு தரும். வாகனத்தாலும் வீடாலும் திருத்தச் செலவுகள் கொடுக்கும். கால்பிடிப்பு, தலைப்பாரம், வயிற்றில் வருத்தம் வரும். குருத்தொழில், வியாபாரிகள், சட்டத்துறையினர்களுக்குப புதிய மாற்றங்கள் உருவாக ஏற்ற வழிபிறக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:; ஞாயிறு, திங்கள் வியாழன், சனி.*

### மகரம்

மனித உணர்வுகளுக்கு இடம் கொடாதவர்கள் ஒருவித பைத்தியக்காரர்கள்தான். ஏனெனில், சோதிடத்தில் வியாழ மாற்றத்தால் சிங்கம், கன்னி இராசிக்காரர் திருமணம் செய்வது துன்பமா? எனக் கேட்கிறார்கள். கோடி பாவங்களைத் தீர்க்கும் குருபகவானால் இரு இராசிக்காரரும் பலன் குறைவேதவிர திருமணம் செய்யக்கூடாது என்பதில்லை. இப்பூவுலக மாந்தர்கள் அவரவர் கிரகாதிக்கப்பலன் திசா புத்தி அந்தகாரன் பலன்படி திருமணம் நடக்கும் பலன் உண்டு. தகுதிக்கேற்ப தொழில் சிறப்பு, தூரத்து உறவினர்கள் வருகை, பொருள் நிலையில் செலவுகள் அதிகரித்தல், நாரி, கால் பகுதிகளில் வருத்தம் என்பன கொடுக்கும். குருத்தொழில், ரீ.வி., வீடியோ, தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

பதவி உயர உயர பணிவு இல்லாவர்கள் மக்களின் வெறுப்புக்கு ஆளாவார்கள். உங்கள் துறையில் நீங்கள் உயருவீர்கள். ஆனால், உங்கள் சொற்களை அளந்து பிரயோகியுங்கள். அல்லது வீண் பிரச்சினை, யோசனை வரும். புதிய நண்பர்கள் உதவி செய்வார்கள். கால் வருத்தம், மலச்சிக்கல், சளித்தொல்லை கொடுக்கும். வாகனச் செலவுகள் கொடுக்கலாம். குருத்தொழில், அரசியல்துறை, பாதுகாப்புத் துறையினர்களுக்குப் புதிய மாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

பணம், பதவி, புகழ் எல்லாம் போராடித்தான் பெறமுடியும். திருமணப் பொருத்தங்களும் அப்படியேதான். சரியான பொருத்தங்கள் சரியான வாழ்வைத் தரும். சிங்கம், கன்னி இராசிக்காரருக்கு அவரவர் கிரகப் பலனுக்கு ஏற்ப திருமணவயதானவர்களுக்கு இந்த ஆண்டில் (2003இல்) திருமணம் நடக்கத் தடை இல்லை. எதிர்நீச்சல், தொழிலில் போட்டிகள், இடமாற்றங்கள், உறவினர்கள் உதவிகள் என்பன கிடைக்கும். வியாபாரிகள், தோட்டத்துறையினர், ஆசிரியர், வைத்தியர்களுக்கு நன்மை வரும். மாணவர்களுக்கு சரியில்லை. கால் வருத்தம், சளி வருத்தமென மருந்து எடுப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

# பொற்பதியில் முகாம் அமைப்பது தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறைப்பாடு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பொற்பதிக் கிராமத்தில் படையினர் புதிதாக முகாமமைத்து வருவது புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக மீறும் செயல். இதனைத் தடுத்து நிறுத்தி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்க கண்காணிப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் கண்காணிப்புக் குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்குமான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவரும், விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி:-

வடமராட்சியில் பொற்பதி கிராமத்தில் முகாம் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் தற்போதும் ஈடுபட்டு வருகின்றனர். முகாம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டோம் எனப் படையினர் மக்களிடம் தெரிவித்துவிட்டு அப்பகுதியில் உள்ள பற்றைகளுக்குள் மறைவாக முகாம் அமைக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுவருகின்றனர் எனப் பொதுமக்கள் எமக்கு முறையிட்டுள்ளனர். படையினரின் இந்நடவடிக்கை அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல். மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு குந்தகம் ஏற்படுத்துவதுமாகும். படையினரின் இந்த நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் அச்சமும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். எனவே, கண்காணிப்புக் குழு நேரடியாகச் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த வாரம் விடுதலைப் புலி மூத்த உறுப்பினர் செல்லக்கிளியின் சிலை திறப்பு விழாவில் இராணுவத்தினர் பொதுமக்களுடன் நடந்துகொண்டவிதம், அதைத் தடுத்து நிறுத்த மேற்கொண்ட நடவடிக்கை ஆகியன கண்டனத்திற்குரியன. இனிமேல் இப்படியான சம்பவங்களில் இராணுவம் நேரடியாகத் தலையிடாமல் இருப்பதற்கு கண்காணிப்புக் குழுமூலம் நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார் இளம்பரிதி.

கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி இப்பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக உறுதியளித்தார். (ஐ-8)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றுகூடல்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள உயர்கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்சங்கம் ஒன்று அமைக்கப் படவுள்ளதால் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் தத்தமது கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-10)

## அரச மரம் சாய்ந்தது

தென்மராட்சி,ஓக.3

சாவகச்சேரி டச்சு வீதியில் 150 வருடங்கள் பழைமை வாய்ந்த அரச மரம் ஒன்று சாய்ந்து வீழ்ந்துள்ளது.

(ஒ-117)

# சில மீனவர்களின் நடவடிக்கையால் சுழற்சி முறைக் கடன் திட்டம் பாதிப்பு

## திணைக்களத் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம்,ஓக.3

கடற்றொழிலாளர்களுக்கு சுழற்சி முறைக் கடனுதவி அடிப்படையில் வழங்கப்பட்டுவரும் உதவியினை சில மீனவர்களும், மீனவச் சங்கத் தலைவர்கள் சிலரும் முறையாக நடைமுறைப்படுத்தவில்லை எனக் கடற்றொழிலாளர் திணைக்கள அதிகாரி ஜோசப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் மீனவர்களின் முன்னேற்றம் கருதி சுழற்சி முறையிலான கடனுதவித் திட்டத்தினை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

காரைநகர் அம்பாள் மீனவர் சங்கம், துறையூர் மீனவர் சங்கம் ஆகியவற்றுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டத்தின் அடிப்படையில் கட்டுமரம், வள்ளம் என்பனவற்றை வழங்கியிருந்தோம்.

காரைநகர் அம்பாள் மீனவர் சங்கத்திற்கென 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 7 கட்டுமரங்களை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கியிருந்தோம். சுழற்சி முறைக்கடன் திட்டத்தை அச்சங்கம் சரியாக நடைமுறைப்படுத்தியதால் மேலும் 13 கட்டுமரங்கள் பெறப்பட்டுள்ளன.

இதேபோன்று துறையூர் மீனவர் சங்கத்திற்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 வள்ளங்கள் வழங்கப்பட்டன. அவை தற்போது 8 வள்ளங்களாக சுழற்சி முறையில் மாறியுள்ளன.

இதேவேளை, வேறு சில சங்கங்கள் ஊடாக சுழற்சி முறைக் கடன் திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதில் வள்ளங்கள் மற்றும் கட்டுமரங்கள் சில மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றைக் கடனடிப் படையில் பெற்றவர்கள் வேறு நபர்களுக்கு விற்றுவிட்டார்கள்.

- இவ்வாறு மீனவர்கள் செயற்படுவதை சில மீனவச் சங்கத் தலைவர்களால் தட்டிக் கேட்கமுடியாதுள்ளது. இதனால், ஏனைய மீனவர்களுக்கான சுழற்சி முறைக் கடனுதவியை வழங்கமுடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-6)

## விமர்சன கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.3

சாந்தி சச்சிதானந்தம் எழுதிய 'வறுமையின் பிரபுக்கள்' என்னும் நூலின் விமர்சனக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலயத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் டாக்டர் வை. தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் விமர்சன உரையை யாழ். பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் வி.பி. சிவநாதன் நிகழ்த்தினார்.

(ஐ-8)

## உணவு முத்திரை விநியோகம்

தென்மராட்சி,ஓக.3

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கான 115ஏ,பி இலக்க நிவாரண உள் உணவு முத்திரைகள் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தமது உணவு முத்திரையினை தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-117)

## கால்நடைகள் சித்திரவதை அறுவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஓக.3

கால்நடைகளை சித்திரவதைக்கு உள்ளாக்கும் விதத்தில் இரு லொறிகளில் ஏற்றிவந்த ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிவான் தலா 2 ஆயிரம் ரூபாவினை அபராதமாக விதித்தார்.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் இந்த ஆறு பேரையும் குற்றம் சுமத்தி ஆஜர்ப்படுத்தியபோதே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. இனிமேல் வாகனங்களில் கால்நடைகளை ஏற்றி வரக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

(ஒ-117)

## சவூதி அரேபியா நன்கொடை

கொழும்பு,ஓக.3

சவூதி அரேபியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய நாநூறு மெற்றிக்தொன் பேரீச்சம்பழங்கள் கடந்த வியாழக்கிழமை முஸ்லிம் சமயவிவகார அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் மாளிகாவத்தையில் நடந்த நிகழ்வில் வைத்து இந்த நன்கொடையைக் கையளித்தார். சவூதி அரசு வருடம் தோறும் வழங்கிவரும் இந்த நன்கொடை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்த வழிவகுக்கும் என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சவூதி அரசாங்கம் கிண்ணியாவில் பாலம் ஒன்றை நிர்மாணிக்க நிதி உதவி வழங்கியிருப்பது குறித்தும் அவர் நன்றி தெரிவித்தார்.

(ஒ-6)

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 - 09 - 1947

மறைவு 05 - 08 - 2000

**அமரர் சிதம்பரப்பிள்ளை ஸ்ரீபவன்**

திதி: 03-08-2003

எமது எண்ண வானில் என்றும்
ஒளி வீசும் வண்ண நிலவே ~ உங்கள்
பொன்மனமும் அன்புப் புதையலும்
எந்நாளும் எம் இதயத்தில் நிழலாடும்.

'ஸ்ரீபவனம்' செட்டித்தெரு,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்.

(20977(21-11-15)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 05 - 1939

மறைவு 26 - 07 - 2001

**திருமதி கதிரவேலு மனோன்மணி**

திதி: 03-08-2003

இன்சொல்லால் எமை மகிழ்வித்து
அறுசுவையால் எமை ஆளாக்கி
அறிவிலும் பொறுமையிலும்
எம்மை உயர்வித்து
உலகில் நற்பெயரோடு எமை
வாழவைத்த அருமை அன்னையே!
என்றும் உம்மை மறவோம்.

அராலி தெற்கு,
அராலி.

(20927) (19)

கணவர், பிள்ளைகள், மருமகள்,
பேரன் (விகாஷ்).







உதயன்

# தமிழர் இன உணர்வை இந்தியா மதிக்குமா? மிதிக்குமா?

நமது அண்டை நாடான இந்தியாவுக்கு நட்புக்கரம் நீட்டும் செய்தியை மீண்டும் விடுதலைப் புலிகள் விடுத்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான வே.பாலகுமாரன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் முக்கிய கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் இந்தியாவுடனான நல்லுறவு குறித்து தெளிவான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

"இந்தியா எமது உறவு நாடு. இந்தியாவோடு எந்த மோதலையும் ஏற்படுத்த என்றுமே நாம் விரும்பியது கிடையாது. மாறாக இந்தியத்தரப்புக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

"நடந்தவை எல்லாம் நடந்தவையாக இருக்கட்டும்.

"நாம் என்றைக்கும் இந்தியாவுக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை. இந்தியாவுடன் நட்புறவோடு இணங்கிச் செயற்பட மனப்பூர்வமாக விரும்புகிறோம். இதில் எந்தவித அநாவசிய குழப்பங்களும் கிடையாது. இதைத்தான் இந்தியாவுக்குச் சொல்ல விரும்புகிறோம்" - இப்படி தெளிவாக - திட்டவட்டமாக - இந்தியா தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை விளக்கியிருக்கின்றார் பாலகுமாரன்.

அதுமட்டுமல்ல, ஈழத்தமிழர்களோடு இந்தியா நல்லுறவைப் பேணுவதைக் குழப்பும் சக்திகளையும் தமது உரையில் மேலோட்டமாகக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார் பாலகுமாரன்.

ஈழத்தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் இனத்தால், மொழியால், கலாசாரத்தால், பண்பாட்டு விழுமியங்களால் ஒன்றிணைந்தவர்கள். இருதரப்புக்கும் இடையில் தாய் - சேய் போன்று தொப்புள் கொடி உறவு உள்ளது. எனவே, ஈழத்தமிழருக்கு ஒன்று என்றால் முதலில் கொதித்தெழ வேண்டியவர்கள் தமிழகத் தமிழர்கள். அவர்கள் கொதித்துத்தான் எழுந்தார்கள். ஆனால், குறுகிய அரசியல் லாபமீட்ட முயன்ற அரசியல்வாதிகள் இருதரப்பினருக்கும் இடையே குழப்பங்களை ஏற்படுத்திப் பிரித்து வைக்கும் முயற்சியில் கணிசமான வெற்றி கண்டிருக்கின்றார்கள். இதுதான் யதார்த்தம்

இதையே பிரமுகர் பாலகுமாரன் "எங்களைத் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்துபவர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும். அந்த வகையிலாவது அவர்களுக்கு நன்மை செய்தவர்களாக இருப்போம்" - என்று சூசமாகக் குறிப்பிடுகின்றார்.

ஓரினத்தின் உணர்வுகளுக்கு இடையே பிரச்சினையை - பிளவை - ஏற்படுத்துவதன் மூலம் அரசியல் லாபம் என்ற சுகத்தை அனுபவிக்க முயலும் அரசியல்வாதிகளுக்கு துணையாக இருக்கும் மற்றத் தரப்பினர் இந்திய அதிகாரவர்க்கம். இவர்களே இந்தியா - ஈழத்தமிழர் தரப்பு உறவைச் சீர்குலைக்கவைப்பதில் முன்னின்று செயற்படுகின்றார்கள். அரசியல்வாதிகளுடன் நெருங்கி அவர்களின் அடிவருடிகளாகச் செயற்படும் இராஜதந்திரிகளும் அவர்களின் அணியினரும் தங்கள் 'எஜமானர்களான' அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் நோக்குடன், ஈழத்தமிழர்கள் குறித்தும் அவர்களின் ஏகபிரதிநிதிகளான புலிகள் குறித்தும் பிழையான - தவறான - கருத்துக்களைத் திணித்து வருகின்றார்கள்.

இதைத்தான் "புலிகளுக்கு எதிரான் செய்திகளை இந்தியா கசிய விட்டுக் கொண்டிருக்கின்றது" - என்று பாலகுமாரன் குற்றச்சாட்டாக முன்வைக்கின்றார்.

"இந்தியாவுடன் எந்தச் சிக்கலுக்கும் போகாமல் நல்லுறவைப் பேணவே விரும்புகிறோம். இந்தியா எங்களைப் பகைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. இதை இந்தியா உணர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

"எம்மோடு இந்தியா நேர்மையாக உறவு வைக்க முன்வந்தால் நாங்களும் இணக்கமாகச் செயற்படத் தயாராக உள்ளோம். எம்மோடு மோதுவதற்கு இந்தியாவுக்கு நியாயமான காரணங்கள் ஏதும் கிடையாது. அப்படி மோதுவதாயின் அதற்கான காரணத்தை அவர்கள்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை புதுடில்லிக்குத் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். இந்தியாவின் பிராந்திய அரசியலில் எந்தக் குழப்பத்தையும் கொண்டு வர நாங்கள் தயாராக இல்லை. எனவே, இந்தியா புலிகளை இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டும்" - என்று பாலகுமாரன் மிக விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நீதி நியாயங்களை - ஆழ, அகல அர்த்த பரிமாணங்களை - புரிந்துகொள்ளாத இந்தியாவின் 'திடீர் அரசியல்வாதிகள்' தமது கற்றுக்குட்டி அரசியல் ஞானத்தோடு இலங்கை விடயத்தை குழப்பமாகக் கையாண்டதும், விலை போன சில இராஜதந்திரிகளும், அதிகாரிகளும் அவர்களுக்கு வழங்கிய தவறான ஆலோசனைகளுமே இந்தியாவுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையில் கடந்த காலத்தில் கசப்புணர்வு வளரக் காரணமாயிற்று.

அவற்றை மறந்துவிட்டு - "நடந்தவையெல்லாம் நடந்தவையாக இருக்கட்டும்" என்று ஒதுக்கிவிட்டு - புதய அததயாயம ஒனறை ஆரமபகக இநதயத தரபபுகக புலிகள் அழைப்பு விடுத்திக்கின்றார்கள்.

அந்த அழைப்பை இந்தியா ஏற்பதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் இடையில் காலங்காலமாக நிலவிவரும் இன உணர்வின் அடிப்படையிலான உறவுப் பாலத்தை மதிக்குமா? அல்லது நாட்டை அரசியல் ரீதியாக வழி நடத்தும் அரசியல்வாதிகளினதும் அவர்களது அடிவருடிகளான அதிகாரவர்க்கத்தினதும் அரசியல் லாப எதிர்பார்பை நிறைவு செய்வதற்காக தமிழரின் இன உணர்வை, தொடர்ந்தும் மிதிக்குமா?

காலம் பதில் சொல்லும்.

# 'மனமுருகி வயல் வெளியில்' கவிதைத்தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.3

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கவிஞர் சுஜேனின் 'மனமுருகி வயல்வெளியில்' என்னும் கவிதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா நாளை நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் மாலை 4.00 மணிக்கு கல்லூரி அதிபர் ந. அரியரத்தினம் தலைமையில் விழா நடைபெறும்.

செல்வி கல்யாணி தேசியக்கொடியை ஏற்றுவார்.

வரவேற்புரையை சூரியகுமாரும் வாழ்த்துரையை ப.மனோகரக குருக்களும் வழங்குவர்.

சி. தங்கேஸ்வரராசா பொது ஈகச்சுடரை ஏற்றுவார்.

நூல் வெளியீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையாற்றுவார்.

சோ. தண்டபாணி தேசிகர் நூலை வெளியிட்டு வைப்பார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன், கலாநிதி சி. சிவலிங்கராஜா ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரைகளை வழங்குவர்.

கவிஞர் சுஜேன் வல்வட்டித்துறையைச் சேர்ந்தவர். சுவிஸில வசித்துவருகிறார். (ஐ)

# நாட்டு நடப்பு

## வேலவன் வினைகள் தீர்ப்பான்!

ஆலடி வேம்படி அரசடி மருதடி
அனைத்திலும் கோவில் கட்டி விட்டோம்
சாலதம் சிறந்த கோயில்கள் பலவும்
சரிசம மாக நாம் அமைத்துவிட்டோம்
சீலர்கள் போல காவியும் கட்டி
கோவிலை சுறண்டி வாழ்ந்துவிட்டோம்
ஆலமதுண்ட ஆண்டவனுக்கு இனி
ஆலயம் கட்டியது போதுமையா!
சாலதம் சிறந்த பாடசாலைகள் தம்மை
சரிவர அமைத்திட முந்திவிட்டால்
கோலமிழந்து கூனி நடந்திடும்
குப்பனும் குப்பியும் வாழ்ந்துவிட்டால்
வேலொடு முருகன் விரும்பியே வந்து
வினைகள்ளத் தீர்ப்பது திண்ணமைய்யா!

- விகடகவி.

# தனிநாட்டுக்கான அரைவாசி சட்ட அங்கீகாரத்தை இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கிவிடுமாம்

## எச்சரிக்கின்றார் கதிர்காமர்

கொழும்பு,ஓக.3

இந்தக் கட்டத்தில் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவது அவர்கள் கேட்டுப் போராடிவரும் தனிநாட்டுக்கு 'அரைவாசி சட்டரீதியான அங்கீகாரம்' வழங்குவது போன்றதாகும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லஷ்மன் கதிர்காமர்.

'உத்தேச இடைக்கால நிர்வாகம்' குறித்து நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் முன்னிலையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் கூறிய கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

அரசு முன்னெடுத்துள்ள உத்தேச இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான ஆவணத்தின்படி அதனை சட்டத்தின் மூலம் கூட திரும்ப மாற்றியமைக்க முடியாது. எனவே, புலிகள் கேட்ட தின்பண்டத்தை (கேக்கை) கையளிக்கும் நிலையில்தான் நாடு உள்ளது. தனிநாடு உங்கள் முன்னிலையில் உருவாகும் சூழ்நிலைதான் ஏற்பட்டு வருகின்றது.

இறுதித்தீர்வுக்குள் கிட்டவும் போகாத நிலையில் இத்தகைய இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது "இறுதிக்கான ஆரம்பத்தையே" (beginning of the end) குறிக்கும்.

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பது குறித்து புலிகளுக்கு சிரத்தை இல்லை. இடைக்கால நிர்வாகம் மூலம் மிக அதிகமானதைக் கோருவதுதான் அவர்கள் திட்டம்.

பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் மிக மோசமாகி வருகின்றது. வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றும்படி புலிகள் கோருவது இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்ற வல்ல. மாறாக அங்குள்ள இராணுவச் சமநிலையைத் தங்கள் இயக்கத்துக்குச் சார்பாக - சாதகமாக - மாறவே.



இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இழக்கவைக்கும் செயற்பாட்டில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முனைப்பாக உள்ளது.

பலாலி படை முகாமின் எதிர்காலம் நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது.

சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் இந்த மோசமான நிலைமையை நாட்டு மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்து விளக்கவேண்டும். தற்போது அரசு நடத்தும் அரசியல் நாடகத்தின் சட்ட விளைவுகளை மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

இந்த விவகாரத்தில் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு வழியுண்டு. எனினும், அவர் தொடர்ந்து பொறுமை காக்கின்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசுக்கு உரிய சந்தர்ப்பத்தை - வாய்ப்பை - தருவது அவரது கடமை. மக்களின ஆணையை மதிக்கும் செயற்பாடாகவே அவர் பொறுமையைப் பேணுகின்றார்.

எனினும், நாட்டின் பாதுகாப்பும் இறைமையும் கேள்விக்குள்ளாகும் போது தொடர்ந்து ஜனாதிபதி பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட விடயத்துக்கான சர்வஜன வாக்கெடுப்புக்கோ அவர் உத்தரவிடலாம் என்றாலும் எமது கட்சிப் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனக் கருதினால் மட்டுமே ஜனாதிபதி புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுப்பார் என நான் நம்புகின்றேன் - என்றார் கதிர்காமர். (உ)

# சட்டரீதியாக பெரும் தொகைப்பணம் சுங்க அதிகாரிகளால் சுருட்டப்படுகிறது

## பிரதி நிதி அமைச்சர் திடுக்கிடும் தகவல்

கொழும்பு,ஓக.3

சுங்கச் சட்டங்களை மீறி கடத்தல், வரி ஏய்ப்பு மற்றும் அதுபோன்ற குற்றங்களை இழைப்போரைக் கண்டுபிடிக்கவும் தண்டிக்கவும் சுங்கத் திணைக்களம் நடைமுறைப்படுத்தி வரும் திட்டத்தினால் பெரும்தொகையை சுங்க அதிகாரிகளே லாபமாக ஈட்டி வந்துள்ளனர். சுங்க அதிகாரிகள் விதிக்கும் தண்டனைகள், அபராதங்கள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானத்தை விட சுங்க அதிகாரிகள் சட்ட ரீதியாகச் சுருட்டியதே அதிகம்!

- இத்தகைய திடுக்கிடும் தகவலை வெளியிட்டிருக்கின்றார் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவீர்த்தனா.

கடத்தல் போன்ற குற்றச்செயல்களை கண்டுபிடிப்பதற்கு சுங்க அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் விதத்தில் சில நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி இத்தகைய தவறிழைப்போருக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையில் கணிசமான அளவு சம்பந்தப்பட்ட குற்றச் செயலைக் கண்டுபிடித்த சுங்க அதிகாரிக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

பிரதி நிதி அமைச்சர் தமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சில புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளார். அதன் பிரகாரம் கடத்தல் மற்றும் வரி ஏயப்புப் போன்ற குற்றங்களுக்காகத் தண்டம், அபராதம் விதிக்கப்பட்ட வகையில் அரசுக்கு 133 கோடி 50 லட்சம் ரூபா கிடைத்துள்ள அதேசமயம் அந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்தனர் என்ற அடிப்படையில் 181 கோடி 80 லட்சம் ரூபாவை சுங்க அதிகாரிகள் ஊக்குவிப்புப் பணமாகப் பெற்றிருக்கின்றார்கள்.

வெகுமதி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தை உடன் மாற்றியமைக்கும் நடவடிக்கை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதி நிதி அமைச்சா பந்துல குணவர்த்தனா தெரிவித்துள்ளார். (உ)

# மருதனார்மடத்தில் மணிக்கூண்டுக் கோபுரம்

தெல்லிப்பழை,ஓக.3

மருதனார்மடம் சந்தியில் புதிய மணிக்கூணடுக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மானிப்பாய், கைதடி, காங்கேசன்துறை பிரதான வீதிகள் வந்து சந்திக்கும் கேந்திர சந்தியாகிய மருதனார்மடம் சந்தியில இந்த மணிக்கூண்டுக் கோபுரம் நிறுவப்பட்டு வருகிறது. அரச திணைக்களங்கள், கல்லூரிகள், பொதுச்சந்தை என்பன நெருக்கமாகக் காணப்படும் பகுதியில் மணிக்கூணடுக் கோபுரம் அமைக்கபபடுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். (ஐ-150)

## நாளை

ஆடி 19
திங்கட்கிழமை
04.08.2003
திதி : ஸப்தமி
பின்னிரவு 2.27 வரை
நட்சத்திரம்: சித்திரை
மலை 5.47 வரை
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

மிகச் சிறந்த சிந்தனையாளராக இருப்பதைப் போலவே மிகச் சிறந்த செயல் வீரராகவும் இருக்க வேண்டும்.

# கந்தரோடை குண்டுக்குளம் புனரமைப்பு வேலை ஆரம்பம்

வலி.தெற்கு,ஓக்3

கந்தரோடையில் உள்ள குண்டுக்குள புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

உலக உணவு நிறுவனத்தின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படும் இக்குளத்தின் பணிகளுக்காக 552 மனித வலு பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இப்புனரமைப்புப் பணிகளில் உடுவில் கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் பொ.குகநாதன், கமத்தொழில் திணைக்களத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் க.ஆனந்தராசா, கந்தரோடை கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு உட்பட விவசாய சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-152)

## ADMISSIONS TO UNIVERSITIES IN RUSSIA

ஆங்கில மொழிமூலமான ரஷ்யாவின்
முதன்மையானதும் சிறப்பானதுமான பல்கலைக்கழகம்

- மருத்துவம் (M.D) பல் வைத்தியம், எஞ்சினியரிங், ரெலி கொம்யூனிக்கேஷன்
- நியாயமான பாடநெறிக் கட்டணம் (தவணைக் கட்டணமுறை)
- சேவைக் கட்டணம், மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது
- WHO, BMC, EU, SLMC ஆல் அங்கீகரிக்கப்பட்டது.
- செப். 2003 பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் ஒன்றாக அழைத்துச் செல்லப்படுவர்.

மேலதிக தொடர்புகளுக்கு:

**Mr. V.SIVASUBRAMANIUM**
**YARL TRADES CENTRE**
11, Modern Market,
Hospital Road, Jaffna.
**T.P.: 222 3152**

(20929) (24-15-18)


## சங்கக் கிளை திறப்பு

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 20ஆம் இலக்க கிளை அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. மேற்படி கிளையின் கிளைக்குழுவின் தலைவர் திருமதி தே.தனராஜ் கிளையைத் திறந்து வைத்தார்.

சங்கத்தின் கணக்காளர் சு.பால சண்முகநாதன், வர்த்தக முகாமையாளர் இ.முருகானந்தன் ஆகியோரும் திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொண்டனர். (ஐ-17)


## GENERAL ENGLISH (A/L) & SPOKEN ENGLISH

BASIC GRAMMAR,
1000 EXERCISES
(PRINTED LESSONS & EXERCISES)
LECTURES By: Mr.B.RUBAN
ஆரம்பம்: 04.08.2003
பி.ப. 5.00 (புதிய நேரம்)
R.J.INSTITUTE,
29/1, EACHCHAMODDAI,
BEACH ROAD, JAFFNA.

(20962) (24-15-18)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19 - 10 - 1957



மறைவு
05 - 07 - 2003

மாவிட்டபுரம் செந்தாவத்தையைச் சேர்ந்த
**அமரர் நடராசா (கறுவல்தம்பி) சந்திரன்**
(லங்கா லிமிட்டட்)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி!

எமது குடும்பத் தலைவரின் இறுதிச்சடங்கில் நேரடியாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (04.08.2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் 31ஆம் நாள் நிகழ்வுகள் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச் வீதி,
உடுவில். (20962) (24-15-18) ச.ஜெயா (மனைவி).

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
07 - 04 - 1930



இறப்பு
19 - 08 - 1996

**அமரர் கதிரன் நடராசா**

திதி: 03.08.2003

இல்லத்தின் தலைவனே!
இதயத்தின் ஒளிச்சுடரே!
உண்மையின் உருவே!
உயிரான எம் ஆலயமே!
என் உயிர்க் கணவனே!
கருணையின் தந்தையே!
எம்மை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் ஆனதுவே!

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

"பேக்கரி லேன்",
உரும்பிராய்.
(20953) (26-24-15-18)

தகவல்:
N. குணேஸ்வரன் (ராகுலன்-மகன்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## வெதுப்பகம் விற்பனைக்கு

உடுவில் மல்வம் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாகவும் மக்கள் குடியிருப்புகள் நெருக்கமாகவும் உள்ள பகுதியிலிருக்கும் மல்வம் வெதுப்பகம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சே.செல்வராசா,
மே/பா மகேந்திரன்
லவ்லேன், உடுவில்.

(21-15-18) (20989)



## JAFFNA CELLULAR & REPAIR CENTER

AUTHORISED DEALER DIALOG GSM &
MOBITEL METROPOLITAN TELECOM
SERVICE (PVT) LTD.



எமது நிறுவனத்தினால் - குறித்த நேரத்தில் சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளும் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

**டயலொக், மொபிட்டல் இணைப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்**

மேலதிக விவரங்களுக்கு விஜயஞ்செய்யுங்கள்:

**யாழ்.செலுலர் றிப்பேயர் சென்ரர்**
இல.151/1/4, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான பஸ் நிலையம் முன்- விமாகி கட்டட முதலாம் மாடியில்
☎ 0777-738888, 0777 - 758805,
0712 - 361967, 0777 - 209175.

☞ மொபிட்டல் தொலைபேசி வைத்திருப்பவர்களுக்கு இணைப்பு மட்டும் பெற்றுக்கொடுக்கப்படும்.

(20643) (24-15-18)



**உங்கள் திருமணச் செலவில்**
**பெரும் பகுதியை நாம் ஏற்போம்..**

பெயாரோஸ்
சுப மாங்கல்யம்




உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை ◦ தங்கச் சங்கிலி ◦ பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள் ◦ ஆபரணங்கள் ◦ பாதணிகள்
- முக அலங்காரம் ◦ தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம் ◦ மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம் ◦ திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக் ◦ திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.

அழகுக்கலை ஆலோசனைகளை
வழங்கும் அனுசரணையாளர்கள்
**Salon Nayana**

மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

Licence No.: C/38/2003

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(28666)

**துரித தபால், பொதிகள் சேவை**

உள்ளூர் வெளிநாடுகளுக்கான

சகல தபால்/பார்சல்கள் எதுவானாலும்

உடனுக்குடன் அனுப்புவதற்கு

**Sri Murugan**

Tele Communication & Agency Post Office,
Computer Systems

303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

## 2ஆவது வருட நினைவஞ்சலி

வையத்துள் வந்தது
10 - 02 - 1930



தெய்வத்துள் மறைந்தது
25 - 07 - 2001

### அமரர் தருமலிங்கம் சோமசுந்தரம்

(பிரபல சட்டத்தரணி)

ஆண்டுகள் இரண்டும் ஆயிற்றோ அந்தோ நீர் பிரிந்து
மீண்டும் ஒருமுறை இங்கு வரமாட்டீரோ?
ஈண்டு உம்மை நினைத்தே இப்பூவுலகில் வாழ்கிறோம்.
வேண்டுகிறோம் சாந்தியை ஆண்டவரிடம் வணங்கியே.

No. 25, E.Aகுறே மாவத்தை,
வெள்ளவத்தை.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21-11-15) (20880)

## ஈரவிழிகளால் நாம் செலுத்தும் இதய அஞ்சலி

9ஆம் மாதம் — 31ஆம் நாள்

மண்ணக வீட்டில்
1926.11.29
உன்னத வீட்டில்
2002.10.17



இருவருக்கு மகளாக
1927.07.21
இறைவனுக்கு மகளாக
2003.07.04

(திரு) மாணிக்கம் கந்தப்பு
இளைப்பாறிய ஆசிரியர். வ.இ.சங்கீத சபை முன்னாள் நிர்வாகச் செயலாளர்

திருமதி குணமணி கந்தப்பு
இளைப்பாறிய அசிரியர்.
(யா/பெரியபுலம் ம.ம.வித்தியாலயம்)

ஆயிரம் நினைவுகள் எம்மைத் தொடும். அனைத்தும் அடுத்த நாள் மறைந்துபோகும். தாய், தந்தை நினைவுகள் எந்த நாளும் எங்களின் உள்ளத்தில் நின்று வாழும். உங்களின் நினைவையே சுமந்த வண்ணம் எங்களின் இதயங்கள் அழுகின்றன.

- பிள்ளைகள் -

Dr.(திருமதி)தனைரஞ்ஜினி
ஸ்ரீரஞ்சன் DI.Colombo.
ஸ்ரீகந்த் குமார் (டுபாய்)
ஸ்ரீகந்த பாலா (Colmbo)
ஸ்ரீகந்த சீலன் (Shrjah)

அம்மம்மா, அப்பப்பாவைப் பார்த்தால் போதும், ஆனந்தம் இரட்டிப்பாய் வளர்ந்து நிற்கும்.

- பேரப்பிள்ளைகள்.
திவ்யா,
வக்ஷனகீதன்.

எமக்கு வாழ்வு தந்து எங்கள் தெய்வத் தாயின் இறுதிச் செய்தி கேட்டு எம்மை நாடி வந்தோர்க்கும் 5A- 59வது ஒழுங்கை, வெள்ளவத்தை முகவரியில், கடைசிக் காலத்தில் எமது தாய் வசித்த போது பலவழிகளிலும் உதவி புரிந்த யோகா குடும்பத்தினருக்கும் நல்லடக்க ஆராதனையில் கலந்து எமக்கு உதவி புரிந்து ஆறுதல் கூறியோர்க்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தோர்க்கும், எமது சோகத்தில் கலந்து எம்மைத் தேற்றிய உற்றார், உறவினர், அன்பர்கள் ஆகியோருக்கும் எமது தெய்வத் தாயின் பெயரில் செய்தித்தாளில் நினைவஞ்சலி செலுத்திய யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தினருக்கும், தொலைத்தொடர்பு மூலம் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் எமது இதய அறையிலிருந்து எழும் நன்றிகள்.

- பிள்ளைகள் -

தகவல்: மகள் Dr.(Mrs)G.Sriranjan
3A,Shuruberry Garden, Colombo - 04
Phone: 581986, 585592, E.mail: keethan85@Hotmail.com




காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.

காலங்காலமாய் சருமத்தை
இளமையாக, பொலிவாக,
ஆரோக்கியமாக
வைத்திருப்பதற்கான இரகசியம்
ஆயுர்வேதத்திலுள்ளது.
இதே ஃபார்முலா மெடிமிக்ஸ்
ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது.
இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள்
மற்றும் தேங்காய் எண்ணெயின்
நற்குணங்கள் நிறைந்த,
கைகளால் தயாரிக்கப்பட்ட
ஒப்பற்ற கலவையாகும்.
மெடிமிக்ஸில் குளியுங்கள்,
உங்கள் சருமம், முகப்பரு, மாசு,
வெயில், சோர்வு
போன்றவையை எதிர்க்கும்,
அதோடு காலம் காலமாய் நீடித்த
பொலிவைத் தரும்.



மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்

சர்வதேசப்புகழ் பெற்ற






**moov Spray**

தற்பொழுது யாழ்மண்ணில் காலபதித்துவிட்டது

இடுப்பு வலி, மூட்டுவலி, முதுகுவலி, தசைப்பிடிப்பு, சுளுக்கு என்பவற்றிலிருந்து

**துரித நிவாரணம்**






விளையாட்டுக்கழகங்கள்,
பாடசாலைகளுக்கு, விஷேட விலைக்கழிவு

விநியோகிப்போர்
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.

ஏக விநியோகஸ்தர்
JEGAN PHARMACY, HOSPITAL ROAD, JAFFNA.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தற்சமயம் பாவனையிலுள்ள Gestetner-250 (Legal Size) ஓவ் (f)செற் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.0777 481164, 0777 732296 (20993)

தனிப் பாவனையிலுள்ள 7 ஸ்ரீ XXX மொறிஸ் மறீனா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிறேமநாயகம் ஜெயதாஸ் மேரி சந்திரா (சாந்தி), 17/2A, புனித அன்னாள் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு. T.P. 3360. (20975)

3 சிறி மொறிஸ் மைனர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 74, சட்டநாதர் கோவில் வீதி (சிறுவர் இல்லத்திற்கு அருகில் - பின்புறமாக), நல்லூர். (20243)

முதுமையடைந்த இரண்டு வேப்ப மரங்களும் பலகை மரத் துண்டுகள் இருக்கை பலகை மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு காலை 6 மணிதொடக்கம் மாலை 6மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: இல.55, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.(20938)

சாவகச்சேரி -மட்டுவில் - நுணாவில சந்தியில் கடை, மில் போடக்கூடிய மூன்று பரப்புக்காணியும், தோட்டக்காணி படைப்புவளவு வீடு கட்டும் காணியும் சக்கிடுத்தார் வளவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சிவகுமாரன், 34, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.(20669)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றுபவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல.1968 (20933)

1971 டாக்டருக்கு இரண்டில் செவ்வாய், கிரகபாவம் நாற்பது, சித்திரை நட்சத்திரம் கணம், யோனி பொருத்தமுள்ள டாக்டரல்லாத மணப்பெண்ணைத் தாயார் தேடுகின்றார். முழு விவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1970, C/o உதயன். (20957)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பிரபல வர்த்தகர் 1965, கிரகபாவம் நாற்பது, செவ்வாய் தோஷமற்றவருக்கு பொருத்தமான மணப்பெண்ணை சகோதரி தேடுகின்றார். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1969 C/o உதயன். (20956)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பிரஜாவுரிமையுள்ளவரும் தற்போது இங்கு சொந்தமாகத தொழில் புரிபவருமான செவ்வாய்க் குற்றமற்ற, 40 வயது மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் படத்தையும் இணைத்து அனுப்பவும். விளம்பர இல. 1967, C/o உதயன், யாழ்ப்பாணம். (20907)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, உதயத்தில் செவ்வாயுள்ள, Dip. in Eng. படித்த, 1962இல் பிறந்த அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. படித்த, தொழில் பார்க்கும் மணமகன் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல.1972, C/o உதயன், யாழ்ப்பாணம். (21004)

## திருமண சேவை

எஞ்சினியர், டாக்டர், கொம்பியூட்டர் பட்டதாரிகள், ஆசிரியர்கள், தனியார் துறையினர், வெளிநாட்டு பிரஜாவுரிமை உள்ளவர்கள் உண்டு. திருப்தியான, துரிதமான சேவை. தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிக சாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (20955)

1974, சுவாதி, செவ்வாய் 2, M.B.B.S. Final அழகிய மாணவிக்கு டாக்டர் மணமகன் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு கொள்ளவும்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(20872)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima பேட்டுக்குஞ்சுகள் 04.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் ஒரு குஞ்சுக்கு ரூபா 10/- கோழித் தீனுக்காக வைப்புப் பணமாக அறவிடப்பட்டு திரும்பத் தரப்படும். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (20841)

## வீடு, காணி விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்திக்கும் கிறிஸ்தவ கல்லூரிக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் திருத்தக்கூடிய நிலையில் உள்ள வீடு எட்டு (08) பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 111312 (C/29235)

## வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 3 பரப்பு காணியும் சிறிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ள கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ.சிவஞானம், 123, கண்டி வீதி, சுண்டுக்குளி, T.P. No. 222 - 3320, டெலிக்கா வானும் விற்பனைக்கு உண்டு. (20979)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக பெரிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 08385595. (சி-29181)

ஒரு பரப்புக் காணியில சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கணேசு மகாலிங்கம், இல.10, கில்னர்லேன், கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.(20881)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40நாள் நிறைந்த அல்சேசன் செப்பெட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மார்க் கண்டு, M.S. லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (20986)

## வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதியில் நல்ல வசதிகளுடன் அமைந்த புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 622, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (20976)

## சோதிடம்

கல்வி, தொழில், விவாகம் சம்பந்தமான உங்கள் வினாக்களுக்குரிய உரியபதில் உடனே தரப்படும். ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாக உங்களது பலாபலன்களைக் கேட்டுப் பாருங்கள். விவரங்களுக்கு க.சிவானந்தன் பிரபல ஜோதிடர், இல. 264, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி ஸ்ருடியோ முன்பாக). (20983)

## நினைவலைகள்

18ஆம் ஆண்டு | 7ஆம் ஆண்டு



முன்னாள் படைத்துறை பயிற்றாளன்
**அன்பு**
(மூத்த தம்பி
தனபாலசிங்கம்)



கப்டன்
**அன்பானந்தன்**
(M.O.)
(சபாரத்தினம் செல்வநீதன்)
(யாழ்.நாச்சிமார் கோயிலடியில் ஏற்பட்ட நேரடி மோதலில்)

1962-05-12 தாயின் மடியில் - 1976-10-29
1985-04-16 தாயக மீட்டல் - 1996-08-03

தமிழீழ மண்ணைக் காத்திடவென்று
தலைவனின் வழியில் தடம் பதித்தாய்!
உமிழ்ந்திடும் கொடிய ஒடுக்குதல் கண்டு
உறுதியாய் எதிர்த்துப் போராடினாய்!
மருத்துவப் பிரிவில் ஆற்றிய சேவைக்கு
மகத்தான பரிசைத் தலைவன் தந்தான்!
கருத்துடன் களத்தினில் போராடியே
கயவர் படையைக் கலங்கிடச் செய்தாய்!
எங்கள் மண்ணைச் சிங்களப் படைகள்
எட்டிப் பிடிக்க வந்த வேளையில்
ஓங்கிய உனது வீரக் கரங்கள்
ஓரிடம் பார்த்து ஓய்ந்தனவே!
ஆண்டுகள் ஓடி மறையினும்
அன்பானந்தன் நினைவு மறக்குமா?

வெற்றிலைக்கேணி. - குடும்பத்தினர்.

(21003) (26-21-11-19)

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 10 - 1953



மறைவு 03 - 08 - 1978

**செல்வன் பத்மலால் அல்பேட்**

அன்பின் தெய்வமகனே! குடும்பத்தின்
குலவிளக்கே! நீர் மறைந்து 25 ஆண்டுகள்
போனாலும் அழுது எங்கள் மனம் அரற்றுகிறது உம்
நினைவால் கவலையுடன் வாடுகிறோம்.
உமது ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் திருப்பலி பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் நாளை (04.08.2003) திங்கட்கிழமை நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்,
சகோதரிகள், மருமக்கள்.

17, செபஸ்ரியன் றோட்,
யாழ்ப்பாணம். (20551)

(21-11-19-26)

## 75ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இன்று 03.08.2003
தனது 75ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும்
திருமதி **கோமதியம்மா நவரத்தினம்**
அவர்களை (*இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை - சாவகச்சேரி இந்துக்கல்லூரி*) சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
வாழ்த்துகின்றனர்.

*நவமதி,*
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*

(சி-29239)(21-11-19-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவர்களான
**உயர்திரு.பொனி றொபேட்** ஆசிரியர்
**உயர்திரு. இரத்தினசோதி** (சோதி மாஸ்ரர்) ஆசிரியர்
ஆகியோரின்
சிறப்புமிகு மாணவனும் கலைமணி விளையாட்டுக்கழக தலைவருமான
**திரு.தி.திலீபன்** (வயது 25)
அவர்கள் 09.07.2003 அன்று கொழும்பில் நடைபெற்ற சோட்டோகான் கராத்தேயில் இலங்கையில் பிரசித்திபெற்ற பொனிறொபேட் ஆசிரியரிடம் இரண்டாம் கறுப்புப் பட்டியைப் பெற்றமைக்காகவும் 2003 ஆம் ஆண்டில் ஆசிய கிண்ணத்தைப்பெற்று மீண்டும் வடமராட்சி மண்ணுக்குப் புகழ் சேர்த்தவரான
**திரு.கணேசமூர்த்தி**
ஆசிரியரின் மதிப்புமிக்க மாணவனான
**இ.ஸ்ரீகரன்** (குமரன்) (வயது 18)
(கலைமணி விளையாட்டுக்கழக நிர்வாக சபை உறுப்பினர்)
மாகாண மட்டத்தில் 50 KG நிறைக்குட்பட்ட பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்றமைக்காகவும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கலைமணி விளையாட்டுக் கழகம்,* *கலைமணி சனசமூக நிலையம்,*
வியாபாரி மூலை

(20922) (25)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பாதணி விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனையாளர் (ஆண்கள்) தேவை.

பாதணி விற்பனையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை 10.08.2003 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**விளம்பர இல: 1971,**
**C/o உதயன், யாழ்ப்பாணம்.**

(20961) (21-11-19-26)


## STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

**Available Courses**
Engineering, Electronics, Communication, Mechanical, IT, B.Sc Micro Biology, Genetics, Computer Science, BBM, BBA, BCA, B.Com, and Diploma Courses, மற்றும் பாட நெறிகள்

*Admission, Visa and Hostel arrangements* செய்து கொடுக்கப்படும்

Become a World Recognized GRADUATE

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலதிக விபரங்களை **யாழ்ப்பாணத்தில்** பெற்றுக்கொள்ள



**IPAS-** Institute of Professional Accounting Studies
199, Main Street, Jaffna. Tel: 0777-563292

Affiliated to
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road,
Colombo-06. Tel: 074- 512 561

S.K Ads

# வேலைத் தலைகீழாகப் பிடித்த முருகன்!

**வே**லைக் கம்பீரமாகத் தூக்கிப் பிடித்த முருகப்பெருமானை நீங்கள் எல்லா ஆலயங்களிலும் பார்த்திருப்பீர்கள். ஆனால், அந்த வெற்றிவேலைத் தரையில் குத்தியபடி பெருநகையுடன் காட்சியளிக்கும் சுப்பிரமணிய சுவாமியை நீங்கள் தரிசனம் செய்திருக்கிறீர்களா?

இல்லை என்றால் நீங்கள் கேரளா செல்லவேண்டும்.

கேரளாவை பகவதிகளும் சாஸ்தாக்களுமே ஆக்கிரமித்துக் கொண்டிருக்க புகழ்பெற்ற முருகன் கோயில்கள் என்றால் இரண்டே இரண்டுதான். ஒன்று ஹரிப்பாடு மற்றது நம் இந்த வார தரிசனமான பெருனை சுப்பிரமணியசுவாமி கோயில்.

சங்கனாச்சேரியிலிருந்து திருவல்லா செல்லும் பாதையில் எம்.சி றோடில் அமைந்திருக்கின்றது இந்த ஆலயம்.

சாலை ஓரத்திலேயே மரத்தடியில் பிரமாண்டமான மயில் ஒன்று நின்றபடி இதுதான் முருகன் கோயிலுக்குச் செல்லும்பாதை என்று சொல்லாமல் சொல்கின்றது.

பாதையில் உள்ள ஒரு சிறிய சிவன் கோயிலைத் தாண்டிச் சென்றால் பளீரெனத் தென்படுகிறது பெருனை கோயில்

தண்ணீர் தளும்பும் குளத்தைப் பெருமூச்சுடன் எட்டிப் பார்த்தபடி கோயிலுக்குள் நுழையலாம். அதன் தூய்மையும், தொன்மையும் நம் மனத்துக்கு இதத்தை வழங்குகின்றது.

கர்ப்பகிரகத்தில் ஆறடி உயரத்திற்கும் மேலே கம்பீரமாக நிற்கின்றார் சுப்பிரமண்யர். சந்தனக் காப்பிலே அவரது முகம் மஞ்சளாக ஜொலிக்கிறது. முகம்முழுக்க நிரம்பியிருக்கிறது புன்னகை. வெற்றிப் புன்னகை. வேல் மட்டும் வித்தியாசமாக எங்கும் இல்லாததுபோல அதன் கூர் முனை தரையைக் குத்தி நிற்க அடிப்பகுதியைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார் முருகன். (அது என்ன சமாசாரம்? என்பதுதாங்க கதை!)

கேரள பாணி செங்கற்களால் வேயப்பட்ட வட்டமான கூரையின் கீழே மூலவர் அருள்பாலிக்கிறார்.

"ஒவ்வொரு சஷ்டியிலும் இங்கே விசேஷம் தான். ஏராளமான மக்கள் கூடுகிறார்கள். சக்குளத்துக் காவு பகவதி, திருவல்லா கோயிலுக்குப் போகும் வழியில் இருப்பதால் பக்தர்கள் நிறையப் பேர் வருகிறார்கள்" - என்கிறார் அர்ச்சகர்.

தம்பியைப் பார்த்தபிறகு அடுத்த தாய் அண்ணன் விநாயகர் சன்னதி.

வெளிப் பிரகாரம் மிகவும் பெரியது. நடந்து செல்வதற்காகக் கல்லால் பாதை அமைத்திருப்பதும் அழகானது.

சிவன்,கிருஷ்ணன், நாகர் ஆகியோர் வெளிப்பிரகாரத்தில் தரிசனம் தருகிறார்கள். எல்லாச் சன்னதிகளிலும் பக்தி மணம்கமழ சகல அலங்காரங்களுடன் தெய்வங்கள் அரங்கேறியிருப்பது சந்தோஷமாக இருக்கிறது.

சரி, அது என்ன ஊரின் பெயர் பெருனை?

முருகப் பெருமான், வெற்றிப் பெருமிதத்தில் பெருனகை உதிர்த்த தலம் இது. பெருனகை பெருனை என்று ஆகிவிட்டது.

வேலைத் தரையில் குத்தி சுப்பிரமண்யர் புன்னகை புரிவது ஏன்? அந்தக் கதைக்குள் நுழைவோமா?

### தாரகாசுரன்

சூரசம்ஹாரம் செய்வதற்காக இந்திராதி தேவர்களுடன் முருகப் பெருமான சென்றபோது முதலில் எதிர்ப்பட்டது கிரௌஞ்சமலை.

அதைக் கண்ட நாரதர் பயபக்தியுடன் சுப்பிரமண்யர் முன் வந்து நின்றார்.எம்பெருமானே,இந்த இடத்திலிருந்து தான் அசுரர்களின் அட்டகாசம் ஆரம்பிக்கிறது. இதோ நம் முன்னே உயர்ந்து நிற்கும் கிரௌஞ்ச மலை, சாதாரண மலையல்ல! இதுவும் ஓர் அசுரன் தான். இதனுள் நுழைபவர்களை மயக்கத்தில் ஆழ்த்திவிடும் இந்த மலை. இந்த மலையைச் சுற்றியுள்ள மாயாபுரியில் தான் சூரபத்மனின இரு தம்பிகளில் ஒருவனான தாரகாசுரன் வசிக்கிறான். யானை முகத்தை உடையவன் அவன்.

போரிலே வல்லவன். அந்த மகா விஷ்ணுவையே போரில் வென்று அவருடைய சக்கராயுதத்தை மார்பிலே பதக்கமாக அணிந்து கொண்டிருக்கிறான் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! இவனைக் கொன்றால் தான் சூரனைச் சுலபமாக வீழ்த்த முடியும்.

'அவ்வாறே செய்வோம்' என்றார் முருகன்.

அப்போது வீரபாகு முருகன் முன் வந்து நின்றார். பெருமானே தாரகாசுரனை அழிக்க நீங்கள் எதற்கு? தாரகன் சூரனின் தம்பி. எனவே அந்தத் தம்பியை அழிக்க, இந்தத் தம்பியே போதும். நான் அவனை அழித்து வருகின்றேன்!

'அப்படியே ஆகட்டும்' என்றார் கந்தன்.

வீரபாகுத் தேவர், தன் ஏழு தம்பிகளோடும் லட்சம் வீரர்களோடும் போருக்குக் கிளம்பினார்.

### வீரபாகு

போர் என்றால் அது போர்!

வீராவேசம் கொண்ட வீரபாகு அசுரர் படைகளுக்கு ஆட்டங்காட்டினார்.

தாரகன் தன் துதிக்கையால் சுழற்றி ஆயிரமாயிரம் வீரர்களைக் கடலில் எறிந்தான்.

வீரபாகு பதினாங்கு பாணங்களை ஒரே சமயத்தில் தாரகன் மீது ஏவினார்.அவனது வில் உடைந்தது.

சினந்தான் அசுரன். சூலத்தைச் கழற்றி வீசினான். அந்தச் சூலம் வீரபாகுவைத் தாக்கியது.

போர் கடுமையாயிற்று.

வீரர்கள் அழிந்தாலும் வீரபாகுவை மட்டும் தாரகனால் சாய்க்க முடியவில்லை.

அசுரனாயிற்றே... சூழ்ச்சிக்குப் பஞ்சமிருக்குமா? அவன் ஒருவனே ஆயிரம் அசுரர்களாய் மாய உரு எடுத்தான்.

அசரவில்லை வீரபாகு. மாய வலைகளை உடைத்தெறிந்தார்.

கடைசியில், கிரௌஞ்ச மலைக்குள் ஓடிப் புகுந்துகொண்டான் தாரகன்.

வீரபாகுவும் விடாமல் துரத்தி மலையினுள் புகுந்தார்.

அந்த மாயமலை தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது.

வீரபாகுவின் மனத்தை மயக்கினான் கிரௌஞ்ச அசுரன். மயங்கி வீழ்ந்தார் வீரபாகு. அவரைத் தொடர்ந்து வந்த சகோதரர்களும் வீரர்களும் கூட 'தொபுக்கடீர்' எனக் கீழே வீழ்ந்தார்கள்.

தாரகாசூரன் மகிழ்ந்துபோனான். ஆக்ரோஷமாய்ச் சிரித்தான். எஞ்சி நின்றவர்களும், அவனுக்கு பயந்து ஓடி ஒதுங்கினார்கள்.

### சுப்ரமண்யர்

நாரதர் துடித்துப்போனார். முருகப் பெருமானிடம் தாரகனின் சூழ்ச்சியை எடுத்துக்கூறினார்.

அபய நாயகனான ஆறுமுக மூர்த்திக்குக் கடும் கோபம் ஏற்பட்டது.

வாயுபகவான் தேரைச் செலுத்தப் போருக்குக் கிளம்பினார்.

விண்ணும் மண்ணும் நடுங்கின.

முருகன் தாரகனின் முன் நின்றார்.

பூரண நிலவையொத்த ஆறு முகங்களையும் அருளொழுகும் பன்னிரண்டு நயனங்களையும், ஞான சக்தியாகிய வேலையும் கண்டான் தாரகன்.

முருகனே இங்கே ஏன் வந்தாய்? விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் என்னிடம் விரோதமுண்டு. உன் தந்தையான சிவனோ எனக்குவரம் தந்தவர். அப்படியிருக்க என்னை எதிர்த்து ஏன் வந்தாய்? என்றான் தாரகன்.

'உன் தவத்துக்கு மெச்சித்தான் என் தந்தை வரம் தந்தார். ஆனால், அதை வைத்து நீ தீமைகளைப் புரிந்ததால் உன்னை அழிக்கச் சொன்னவரும் அவரே, ஆக்குபவரும் அவரே, அழிப்பவரும் அவரே!'

கடகடவெனச் சிரித்தான் அசுரன். 'கருடன் மீதுவந்து என்னை எதிர்த்த திருமாலின் சக்கரம் என் கழுத்திலே ஆபரணமாக இருப்பதை நீ பார்க்கவில்லையா? என்னை வென்றவர்கள் யாருமில்லை.... போ போய் விடு...'

இப்போது சிரிப்பது முருகனின் முறை. 'உன்னையும் மாயையின் உறைவிடமான கிரௌஞ்ச மலையையும் என் சத்திவேலால் வெல்லப் போகிறேன்' என்று சூளுரைத்தார் வேலவன்.

அசுரனுக்கும், அழகனுக்கும் யுத்தம் ஆரம்பித்தது.

### வேல்

தாரகன் கோடி பாணங்களை சுப்ரமண்யர்மீது ஏவினான். முருகப்பெருமான் இரண்டே இரண்டு ஆயுதங்களை வீசினார். ஒன்று அந்த யானைமுக அசுரனின் தும்பிக்கையை அறுத்தது. அடுத்தது தந்தத்தைச் சிதைத்தது.

அவமானமடைந்தான் அசுரன். முருகனின் தேர்க்கொடியை அறுத்தான். முருகன் அவனது தேரையே அழித்தார்.



வெகுண்ட அசுரன் நாராயணாஷ்திரத்தையும் பிரம்மாஸ்திரத்தையும் விடுத்தான். அவை முருகனின் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தன.

சிவபெருமான் தந்த பாசுபதாஸ்திரத்தை ஏவினான் தாரகன்.

தந்தையை நினைத்தபடி அதை ஒரு கையால் பற்றிக்கொண்டான் தனயன். கொடுத்தவனே எடுத்துக் கொண்டான்.

கடைசியில் கிரௌஞ்ச மலையுடன் ஒன்று சேர்ந்தான் தாரகன். இருவரும் மாயாஜாலங்களைக் காட்டி மிரட்டினார்கள்.

சுப்பிரமண்யர் பொறுமையிழந்தார். தன்கையிலிருந்து சக்தி வேலை எடுத்தார். 'நீ போய் தாரகாசுரனையும் கிரௌஞ்ச மலையையும் கொன்று வென்று வருவாயாக' என்று ஆணையிட்டார்.

துள்ளி வந்தது வேல்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றும் அக்னி எதிரிகளைச் சுடுவதுபோல் முருகனின் வெற்றிவேல் ஒரே விநாடியில் தாரகாசுரனையும் மாய மலையையும் வெட்டிச் சாய்த்தது.

தாரகன் நெஞ்சு கிழிந்து மாண்டான்.

கிரௌஞ்ச மலை தூள் தூளாய்ச் சிதறிற்று.

அங்கே மயங்கிக் கிடந்த வீரபாகு முதலான வீரர்கள் மயக்கம் தெளிந்து எழுந்து வந்தார்கள்.

வீரவேல் வெற்றி வேல் கந்தவேளின் கையில் சென்று மீண்டும் அடைக்கலம் புகுந்தது.

சம்ஹாரம் நிகழ்த்திய வேலின் கோபத்தையும் தனது கோபத்தையும் தணிக்க முருகப்பெருமான் அதைத் தலைகீழாய்ப் பிடித்து பூமியில் நிறுத்தினார். பெருநகை பூத்தார்.

அந்த இடம்தான் பெருனை சுப்ரமண்யர் ஆலயம். வெற்றிவேல் முருகனுக்கு... அரோகரா.

(நன்றி: குமுதம்)

**பெருனை**

★ கேரள மாநிலம் சங்கனாச் சேரியில் உள்ள முருகன் கோயில் இது.

★ தாரகாசுரனை சம்காரம் செய்தபிறகு வெற்றிப் புன்னகையுடன் கந்தன் வந்துநின்ற தலம் இது.

★ ஷஷ்டி விரதம் இங்கே சிறப்பானது.

★ அருகில் திருவல்லா, சக்குளத்துக்காவு பகவதி ஆலயங்கள் இருக்கின்றன.

★ சபரிமலை செல்லும் பக்தர்கள் சுலபமாகச் செல்லாம்.

---

குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற

## இராணுவத் தாக்குதல் என்று முதலில் கூறிய ஒஸ்ரின் பின்னர் மறுப்புத் தெரிவித்ததேன்?

கொழும்பு,ஓக.3

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தெரிவித்திருந்தார். பின்னர் அவர் அக்கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்தார். இது ஏன்?

விடுதலைப் புலிகள் அவரது கூற்றுக் குறித்து எழுப்பிய கேள்வியே அவரது மறுப்புக்கான காரணம் என்கிறார் சரத் அமுனுகம எம்.பி.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில் பேசியபோதே அமுனுகம இவற்றைத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தத்தை மீறி மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமானால் 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். இதன்படி ஒஸ்ரின் பெர்ணாண்டோவின் அறிவிப்பு வெளிவந்த நாளை ஒப்பந்தத்தை மீறுவதற்கு விடுக்கப்பட்ட அறிவிப்பின் முதல் நாளாகக் கொள்ளலாமா என்று புலிகள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதனையடுத்தே ஒஸ்ரின் பெர்னாண்டோ அவசர அவசரமாக நான் அப்படி தெரிவிக்கவில்லை என்று மறுப்புத் தெரிவித்திருந்தார்.

குரங்குபாஞ்சான் முகாமில் மிகவும் நீண்டதூரத்துக்கு ஏவுகணைகளை ஏவக்கூடிய ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. இது திருகோணமலை துறைமுகம் மற்றும் கடற்படைக்கு பாரிய அச்சுறுத்தலாகும் எனவும் அமுனுகம தெரிவித்தார். (ஐ)

## ஈழவேந்தன் உரை

யாழ்ப்பாணம்,ஓக.3

'பாதுகாவலன்' பத்திரிகையின் மாதாந்த முதல் ஞாயிறு கூட்டத் தொடரில் இன்று 'ஈழத்தமிழ் விடுதலை வரலாற்றில் தமிழ் கத்தோலிக்கர்களின் பங்களிப்பு' எனும் தலைப்பில் மா.க.ஈழவேந்தன் உரையாற்றவுள்ளார்.

காலை 10மணிக்கு பாதுகாவலன் பணிமனையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பாதுகாவலன் பத்திரிகையாளர்களும் ஆர்வலர்களும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## கைதடியில் காவலரண்

கைதடி,ஓக.3

கைதடிச் சந்தியின் மையப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் காவலரண் ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை இரவு அமைக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதி, மானிப்பாய் வீதிச் சந்தியில் இடையேயான பாரதியார் சிலை முன்னர் இருந்த இடத்திலேயே இவ்வாறு காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரின் இரவு நேர ரோந்தும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-75)

## கூ.மொ.வி. நிலையமும் விரைவில் தனியார் மயம்!

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை தனியார் மயமாக்கும் நடவடிக்கை இன்னும் சில தினங்களில் முடிவடையும். இதன் மூலம் 68 கோடி ரூபா அரசுக்கு கிடைக்கும் என்று வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் உரிமை தொடர்ந்து அமைச்சின் வசமே இருக்கும். அதன் முகாமைத்துவத்தை மாத்திரமே தனியார் மயப்படுத்தி உள்ளோம். இதனால் வர்த்தக ஏகபோகம் தனியாருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகக் கருதமுடியாது.

கூ.மொ.வி. நிலையத்தை விட சில தனியார் வர்த்தக நிலையங்களில் சில பொருள்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. கூ.மொ.வி.நிலையம் தனியார் மயமாக்கப்படுவதால் வர்த்தகப் போட்டாபோட்டி அதிகரிக்கும். பாவனையாளர்களுக்கு இதனால் குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.(ஐ)

சமாதான முயற்சிகள் குறித்து மேலும் ஆராய

## அமெரிக்க செனட் உறுப்பினர் ஒருவர் அடுத்த வாரம் இலங்கை வருகின்றார்

கொழும்பு,ஓக.3

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார உறவுகளுக்கான குழுவின் ஓர் உறுப்பினரான டாக்டர் ஜோனா பிளாங்க் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சி குறித்து மேலும் அறிந்து கொள்ளும் உண்மை கண்டறியும் ஒரு பயணத்தை மேற்கொண்டே அவர் இங்கு வருகிறார்.

இலங்கையில் தங்கியிருக்கும் நாள்களில் அவர் அரசியல் தலைவர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்திப்பார். காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் அவர் செல்வார்.

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி ஒத்திவைக்கப்பட்டுள்ளது

We Serve

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை சவாரித்திடலில் நடத்தப்படவிருந்த மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் 10.08.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(C29283-18-32-16-30-13) -சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

## அறிவித்தல்

வலி.தெற்கு பிரதேச சபை - சுன்னாகம் உள்ளூராட்சி வாரம் - 2003
இறுதிநாள் நிகழ்வு பிற்போடல்

இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு எமது சக உத்தியோகத்தரின் மரணம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
(21014)(17-16-13-30)
செயலாளர்.

உ
குருவே துணை



## உயர்திரு.மயில்வாகன சுவாமிகள் அவர்களின் 18ஆவது ஆண்டு குருபூசைத்தின நிகழ்வுகள்

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : நாளை (04-08-2003) திங்கட்கிழமை
காலை 9.00 மணியளவில் நிகழ்வுகள் நடைபெறும்.
அருளுரை: நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
சிறப்புரை: செஞ்சொற்செல்வா ஆறு.திருமுருகன்

இசையரங்கம்

கனடாபுகழ் "இசை விற்பன்னர்" வீநாசித்தம்பி சண்முகம் ஆசிரியர் அவர்களின் மாணவர்களாகிய
இசைச்செல்வன் ஜெயகுலசிங்கம் பிரகாஷ
இசைச்செல்வி ஜெயகுலசிங்கம் லக்ஷ்ம ஆகியோரின் இன்னிசை நிகழ்வு பக்கவாத்திய சகிதம் நடைபெறவுள்ளது.

இசை நிகழ்விற்குரிய அறிமுகவுரை:
திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை
(இசை ஆசிரியை, உடுப். மகளிர் கல்லூரி)

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பேச்சுவன்மை

கண்வைத்திய நிபுணர் S. குகதாசனால் கண்பரிசோதனை செய்யப்பட்ட மாணவர்களுக்கு கண்ணாடி வழங்குதல்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட இரு மாணவிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் துவிச்சக்கரவண்டிகள் வழங்குதல்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு லண்டன் சிவயோக நிறுவனத்தின் அனுசரணையுடன் தையல் இயந்திரம் வழங்குதல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
-சந்நிதியான் ஆச்சிரமம்.
(சி-29274) (17-16-13-30-19)

## கண்ணீர்த் துளிகள்



மலர்வு 01 - 07 - 1965

உதிர்வு 01 - 08 - 2003

## திருமதி ஜெயராணி வரதராஜா

(ஆசிரியை,யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்)

வெள்ளிப் புது நிலவாய்
பூமியிலே அவதரித்து
கள்ளமில்லா உள்ளத்துடன்
கனிமொழிகள் பேசிவர
உள்ளத்திலே உனக்கோர்
கோயில் நாம் வைத்திருக்க
பொல்லாத நோய் வடிவில்
காலனவன் கவர்ந்திழுக்க
சொல்லாமல் கொள்ளாமல்
சென்ற இடம் யாதோ?

உம் பிரிவினால் வாடும்:
முருகையா குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் அருகில்,
தெல்லிப்பழை. (21016) (26) (17-16-13-30)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம்,ஒக.3

நல்லூர் கந்தன் உற்சவத்தை யொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் 'தெய்வீக இசையரங்கு' இன்று தொடக்கம் எதிர்வரும் 28 ஆம திகதிவரையும் துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையும் இடம் பெறவுள்ளது.

கொடியேற்ற தினமான இன்று செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் ஆசியுரை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறவுள்ளது. (ம-10-17)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.3

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன ஆலய அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (10-185)

★ ★ ★

சாவகச்சேரி,ஒக.3

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை 8 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம-10)

## வலைபந்தாட்ட மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.3

வலைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள இலங்கை வலைபந்தாட்டச் சம்மேளனப் பிரதிநிதிகளான செல்வி சம்பா குணவர்த்தனா, ரி.எம்.தெய்வேந்திரம ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவர். (ம-3)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்

(13-30-29) (21025)

மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)
இல. 54. மனிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயிலடி.)
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

03.08.2003

HAPPY



BIRTHDAY

### வேனுஷா VANUSSA

தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்த கிருபாகரன்-ராஜனி தம்பதிகளின் செல்வப்புதல்வி வேனுஷா இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை தமது இரண்டாவது பிறந்ததினத்தை பிரான்ஸில் (FRANCE) உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். வேணுக்குட்டியை அப்பா கிருபாகரன்,அம்மா ராஜனி, அம்மம்மா திருமதி வேலாயுதபிள்ளை,மாமி திருமதி திருநீலகண்டர், பெரியமாமா (தங்கா), சின்னமாமா(கஜன்), சித்தி(பேபி), மச்சாள்(சுதா), இத்தாலி மச்சான், கொழும்பு பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பழம்பதி விநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(21013) (25-17-13-16-30)
தகவல்:
V. கஜன்.
(மாமா)

## நெஞ்சு விட்டகலாத 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர் க.கிருஷ்ணபிள்ளை

மண்ணில் 15-11-1918

விண்ணில் 04-07-2003

அமரர்
### கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்
நாச்சிமார்கோயிலடி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
- வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான ஐயாவே!
வையத்துள் நாம் வாழும் வரை -
நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்!

04-07-2003இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி,கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் செய்து இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


-குடும்பத்தினர்.

601/2, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(17-16-13-30)



உ
சாமியே சரணம் ஐயப்பா!

## இலங்கை தமிழக நல்லையம்பதி பச்சைமயில் வாகனன் முருகனுக்கும் அனலையம்பதி வன்புலிவாகனன் ஐயப்பனுக்கும் இன்று மஹோற்சவம் ஆரம்பம்



அண்ணன் தம்பி ஆலயத்துக்குச் செல்லுவோம். அவர்களின் பாதக் கமலங்களைப் பாடிப் பரவிப் பணிந்தேத்தி சிரந்தாழ்த்தி வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றுய்வோமாக.

- கனகசபை சுந்தரலிங்கம்
(காரை மணிகண்டன்)

காரைநகர்.
(21002) (26) (17-16-13-30)

## ஆலய நிர்வாகிகளுக்கு இன்று ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஓக.3

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினருக்கான ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்திலும் - கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினர்களுக்கான ஒன்றுகூடல் பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இந்த ஒன்றுகூடலில் சகல இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினரையும் கலந்துகொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

(3-6)


## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் கீழ்க்காணும் வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

★ விற்பனைப் பிரதிநிதி
★ பொருள்கள் விநியோகிப்போர்
★ காசாளர் (கணக்கு எழுதத் தெரிந்தவர்)
★ மருந்தகத்தில் வேலைபழக விரும்புவோர்.

"WESKO" "வெஸ்கோ"
(யாழ் மருந்தகம்)
470.ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P-2223188
(21028) (32)


## நாளைய நிகழ்வுகள்

கைதடி,ஓக.3

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடி உப பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10-75)

★ ★ ★

வடமராட்சி,ஓக.3

மயில்வாகனம் சுவாமிகளின் 18 ஆவது குரு பூசைத்தினம் நாளை திங்கட்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புரையாற்றவுள்ளார்.

குருபூசை தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(ம-10-173)


## தேவை

மில் வேலையில் அனுபவம் உள்ளவர்,பழக விரும்புபவர், கடைக்கு உதவியாளர் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ்
N-18.றக்கா றோட்.
யாழ்ப்பாணம்.
Tel-5745
(21031)(32)


## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஓக.3

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

13 ஆவது ஆண்டாக நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் 4தடவைகளும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் ஒரு தடவையும் கிண்ணத் தைசுவிகரித்துள்ளன.

பலம்வாய்ந்த இரு அணிகளில் எந்த அணி இன்று கிண்ணத்தைக் கைப்பற்றும் என ரசிகர்கள் எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இன்றைய ஆட்டத்தில் பிரதம விருந்தினராக நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த பொ.சந்திரநாதன் கலந்துகொள்கிறார்.

(ம-3-6)

## யாழ்.பல்கலையில் சிங்களத் திரைப்படம்

யாழ்ப்பாணம்,ஓக.3

அசோகா ஹந்தகம எனும் சர்வதேச விருதுகள் பெற்ற சிங்கள இயககுநரின் நெறியாள்கையிலான "மேமகே ஸந்த" (இது எனது நிலவு) எனும் சிங்களத் திரைப்படம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் வாரந்தோறும் நடைபெற்றுவரும் கலைத்துவ திரைப்படக்காட்சித் தொடரிலேயே இச்சிங்களத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. திரைப்படத்திற்கு முன்னர் "அனைத்து பாதைகளும் சினிமாவை நோக்கி" எனும் விவரணப் படமும் காண்பிக்கப்படவுள்ளது.

(ம-3)




அனலையம்பதி நயினாகுளம்
அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில்
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

03-8-2003 ஞாயிறு நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றம்
09-8-2003 சனி மாலை வேட்டைத் திருவிழா
11-8-2003 திங்கள் காலை தேர்த்திருவிழா
13-8-2003 புதன் மாலை திருக்கல்யாணம்.

விளம்பர அன்பளிப்பு:
ரவி பல்பொருள் வாணிபம்
5ஆம் வட்டாரம்
அனலைதீவு.
உரிமையாளர்: கா.ரவீந்திரன்.
(21032) (32)



## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. உடனே நேரில்வரவும்.

மில்லேனியம் பஷன் & பொம்பே பஸார்
10,11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-29284)


# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி பாலசிங்கம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், 197, பொற்பதி வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலசிங்கம் அவர்கள் நேற்று (02.08.2003) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வியாழம்மா தம்பதியின் அருமை மருமகனும் காலஞ்சென்ற நடனமூர்த்தி மற்றும் மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகாம்பிகை, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் வசந்தகுமாரி, ஸ்ரீபாதன்(ஹரிணி ஹாட்வெயர்ஸ்), ஜெயந்தி(கனடா), ஸ்ரீரங்கன் (பொறியியலாளர்,கனடா), ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காந்தரூபன்(கமலீ பல்பொருள் வாணிபம், மல்லாவி), கலையரசி,கதிர்ச்செல்வன்(கனடா), தனுஷா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும் கஜந்தன், ஷர்மினி, தர்ஷிகா, துசிகா(கனடா), தயான்(கனடா), ஹரிணி, ஹரிகரன் ஆகியோரின் பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

*இல.197, பொற்பதி வீதி,*
*கோண்டாவில்.* (21030)(16-17)

தகவல்:
பா.ஸ்ரீபாதன் (மகன்)

## மாரிமுத்து ஆறுமுகம்

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது கருங்காலியில் வசித்தவருமாகிய மாரிமுத்து ஆறுமுகம் அவர்கள் 01.08.2003 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சைவம் சிதம்பரப்பிள்ளை மாரிமுத்து -அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பண்டாரவளை R.K.செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் அருட்செல்வி,காலஞ்சென்ற நிர்மலகுமார் மற்றும் சத்தியராணி, ஈஸ்வரகுமார் (E.S.P.ஈசன்), மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆனந்தராசா, குககேஸ்வரன்(ஸ்ரீமுருகன் பல்பொருள் வாணிபம், கிளிநொச்சி), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் மகாலட்சுமி, சுப்பிரமணியம் (கவிதா நகை மாளிகை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுரேந்திரன்(இளைப்பாறிய தபாலதிபர்), நாகேஸ்வரி, இராசேந்திரன், கணேசமூர்த்தி (பராசக்தி ஏஜென்ஸி, பண்டாரவளை), ஞானேந்திரன், ரவீந்திரன், (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காயத்திரி, ரகுவரன், பேபிசாமினி, விக்னராசா, சாரதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கருங்காலியிலுள்ள இல்லத்தில் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.* (21009) (25-13-16-17)

தகவல்:
ஈஸ்வரகுமார் (E.S.P ஈசன்)
*மகன் - யாழ்ப்பாணம்*

## செல்லப்பா முத்துச்சாமி

கோப்பாய் மத்தி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா முத்துச்சாமி அவர்கள் 27.07.2003 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, அழகம்மா, முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

தகவல்:
மு.நவரத்தினராசா *(கிளி)*,
மு.செல்வராசா *(சின்னராசா)*,
மு.தங்கராசா.

## திருமதி நடராசா இராசமணி

காரைநகர்,பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இல.3, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமணி அவர்கள் (31.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா (பான்ஸி றேடர்ஸ்,KN) அவர்களின் அன்பு மனைவியும் செல்வராசா, சிவராசா, ஜெயராசா, தவராசா, புஸ்பராணி ஆகியோரின் அருமைத் தாயாரும் V.K.குமார், நிர்மலாதேவி, சகுந்தலாதேவி, நிலோஜினி, சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுசூயா, துவாரகா, அகிலன், தர்சினி, டினுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரசன்யாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*03,சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (21026) (29-16-17)

தகவல்:
ந.செல்வராசா *(மகன்)*

## திருமதி ஜெயமாலா மகாதேவன்

(வலி.தெற்குப் பிரதேச சபை உத்தியோகத்தர்)

மல்லாகம், பங்களா ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமாலா மகாதேவன் அவர்கள் நேற்று (02.08.2003) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தம்-இராசம்மா (பாக்கியம்) ஆகியோரின் ஏக புத்திரியும் மகாதேவன் (கால்நடை வைத்தியர், தெல்லிப்பழை) அவர்களின் அன்பு மனைவியும் துவாரகன், நர்த்தனன், தந்தகரன் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னுத்துரை-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயக்குமார் (லண்டன்), ஜெயவதனன் (லண்டன்), ஜெயகேயன் (லண்டன்), ஜெயவிந்தன் (புள்ளிவிவர உத்தியோகத்தர், கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் புஸ்கலாதேவி (லண்டன்), தர்சினி (லண்டன்), நிகேதினி (கொழும்பு), சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரவிந், நதுஷன், பிரார்த்திகா (லண்டன்), மிதுலன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஜெயநிகேதன்',*
*வங்களா லேன்,*
*மல்லாகம்.* (21027) (32-16-17)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பு சரஸ்வதி

வளலாயைப் பிறப்பிடமாகவும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி தம்பு சரஸ்வதி அவர்கள் நேற்று (02.08.2003) சனிக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செம்பிகலட்டி,*
*இடைக்காடு,*
*அச்சுவேலி.* (21020) (25-13-16-17)

தகவல்:
தம்பு சிவலிங்கமூர்த்தி

## மாணிக்கம் செல்வச்சீரான்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்வச்சீரான் அவர்கள 31.07.2003 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மாணிக்கம் - திலகவதி தம்பதிகளின் அன்பு மகனும் ஜெனியின் அன்புக் கணவரும் டெரன்சி, நெறோகன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வனிதா, அகிலா, விமலா (ஜேர்மனி), செல்வக்குமார் (லண்டன்), நிர்மலா,செந்தில்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லமணி, மகாலிங்கம், சந்திரகாந்தன் (ஜேர்மனி), சிவசக்தி (லண்டன்), கேசவராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை க.மாணிக்கம் தம்பதியரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊர்காவற்றுறை ஊருண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளளவும்.

*முகாம் வீதி,*
*ஊர்காவற்றுறை.* (21000) (26-16-17)

தகவல்:
க.மாணிக்கம் *(தந்தை)*


லஷ்சுமி சினிமா
இணுவில்
எம்.ஜீ.ஆர், ராதாசலூஜா, அசோகன், மனோகர் நடித்த
இதயக்கனி
தினசரி: 11.00, 3.00, 7.00
(20985)(31-14-16)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C29232) (31-14-16)

நிறஞ்சனாஸ் சங்கானை
முரளி, தேவயானி நடித்த
காதலுடன் (ரீலஸ்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
RED SEORPION
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-14-16)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,9.30.
(C/29233) (31-14-16)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், தேவயானி, விவேக் நடித்த
தென்காசிப்பட்டணம் (ரீலஸ்)

தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
தினசரி காலை 11.00 மணிக்கு CROUCHING TIGER HIDDEN DRAGON
(C/29231) (31-14-16) சிறந்த கராட்டிச்சித்திரம்.

## வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் இருந்து தப்பியுள்ளார்.

தன்னைக் கைதுசெய்த பொலீஸார் தனது காலில் கடுமையாகத் தாக்கியதாகவும் இதனால் தன்னால் நடக்கமுடியாதிருப்பதாகவும் அவர் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து அவரை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த புதன்கிழமையன்று சிறை அலுவலர்கள் இவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளை சிறை அலுவலரை ஏமாற்றி விட்டு இராஜேந்திரம் தப்பிவிட்டதாக கூறப்பட்டது.

இதனையடுத்து, இவருக்கு காவலாக நிறுத்தப்பட்டிருந்த சிறை அலுவலர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தப்பிய கைதியை பொலீஸார் தேடி வருகின்றனர். (ம-ரி)

## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் சமாதான முயற்சிகள் தொடர்பாக யாசூஷி அகாஷி உரையாற்ற இருக்கின்றார்.

அதன்பின் ஜப்பானியக் குழுவினர் கொழும்பு திரும்புவர். (ம-3)

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவல்துறை உத்தியோகத்தர்கள் கடல் மார்க்கமாகவே அழைத்துச் செல்லப்பட்டனர். எனினும் இரண்டாவது தொகுதியினர் இம்முறை தரை மார்க்கமாக அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ காவல்துறையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்குடனேயே மேலதிகமாக இந்த உத்தியோகத்தர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழீழ காவல்துறையின் கிளிநொச்சி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்காமத்தில் இயங்கிவரும் காவல்துறை அலுவலகத்திற்கு மேலதிகமாக கரடியனாறு, வாகரை ஆகிய இடங்களிலும் புதிய காவல்துறை அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.(ம-6)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் இப்போது ஈடுபட்டுள்ளார். அவரின் விடயத்தில் குறுக்கிடதாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். அதேவேளை, குரங்குபாஞ்சான் முகாமை அகற்றப்போவதில்லை என்று தமிழ்ச்செல்வன் உறுதிபடக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# நிரந்தர சமாதானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுக்கமான பணிப்பின்பேரில் இன்று வரை நாம் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். நிரந்தர சமாதானம் தோன்றுவதற்கும், எமது மக்கள் எதிர்பார்க்கும் விடியல் கிட்டுவதற்கும் மேலும் விட்டுக்கொடுப்புகள் செய்யத் தயாராகவுள்ளோம்.

தமிழர் தாயகம் ஆரம்பகாலம் முதல் திட்டமிட்டு - பறிக்கப்பட்டு - ஆக்கிரமிக்கப்பட்டு வந்தமை யாவரும் அறிந்த விடயம். ஏனைய சமூகத்தவர்களின் நிலத்தை எண்ணளவு கூட நாம் கேட்கவில்லை. எமது நிலம் எமக்கு வேண்டும். எமது நிலத்தின் ஓர் அடியைத்தன்னும் விட்டுக் கொடுக்கமுடியாது. நாம் இருப்பது வாடகை வீடல்ல, மாதிரிக்கிராமமல்ல, காலம் காலமாக உறுதி எழுதப்பட்ட தமிழர் பூமி. எமது வீட்டில் இருந்து எம்மை விரட்டமுடியாது அதற்கு விட்டுக்கொடுக்கவும் நாம் தயாரில்லை.

குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் கூட அப்படித்தான். அதில் நீண்டகாலமாக நாம் வாழ்ந்த இடம். எவர் வந்தாலும் அதனை உறுதிப்படுத்த முடியும். குரங்குபாஞ்சான் விவகாரம் சமாதானத்தைக் குழப்பும் சக்திகளால் ஏற்படுத்தப்பட்டது. இதில் அலட்டிக் கொள்வதற்கு எதுவுமில்லை.

இந்த விடயத்தில் மக்கள் குழம்ப வேண்டியதில்லை. இதனால் மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என அஞ்சத்தேவையில்லை.

வலிந்து நாம் சண்டைக்குப் போக மாடடோம். அதேவேளை எமது படைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடரும். இது எமது எதிர்கால நலனையும், எமது மண்ணையும் காக்கும் நோக்கம் கொண்டது. இது யுத்தத்திற்கு தயாராகின்றோம் என்பதற்கு அறிகுறியல்ல. ஒரு நாட்டின் பலம் அதன் படைகளிலேயே தங்கியுள்ளது. இன்று நாம் சிறந்த படைபலத்துடனும், மனோதிடத்துடனும் இருப்பது உலகறிந்த விடயம்.

எம்மீது வலிந்து போர்தொடுக்கப்படுமானால் நாம் தற்பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது தவிர்க்கமுடியாது போகும். எனினும் எமது தலைமை போரில் ஆர்வங்காட்ட விரும்பவில்லை. சமாதானம் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்றே விரும்புகின்றது. நெடுந்தீவில் புதிய படை முகாமகள் அமைக்கப்பட்டமை, திருமலை, கோபாலபுரத்தில் புதிய கடற்படை முகாம் அமைத்தமை, குரங்குபாஞ்சான் எமது முகாமிற்கு சமீபமாக (04 கி.மீ தொலைவில்) 75இற்கு மேற்பட்ட படையினரைக் குவித்திருப்பது உட்பட உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை மற்றும் உடன்படிக்கையில் கூறப்பட்டவற்றை நிறைவேற்றப்படாமை ஆகிய அரசின் நடவடிக்கைகளை மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

இதுவரை உடன்படிக்கையை மீறியது யார் என்பதையும், இழக்கமுடியாத பெரும் இழப்புக்களுக்கு மத்தியில் பொறுமை காத்து நிற்பது யார் என்பதையும் மக்கள் உணரவேண்டும்.

இப்போது அமைக்கப்பட்டிருக்கும் மறவர்படை எமக்கு மேலும் வலுச் சேர்க்கும். ஒவ்வொரு தமிழனும் துணிந்து செயற்பட முன்வரும்போது எமது அச்சம் பறந்து விடுதலை கையில் கிடைக்கும்.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கள் திட்டமிட்டு சிங்கள அரசுகளால் பறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த தென்தமிழீழத்தை மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

எமக்கு ஒரு நல்ல ஒரு நிர்வாகம் கிடைக்கும் போது, நன்கொடையாக கிடைக்கப் பெறுகின்ற பெருந்தொகை நிதியானது எமது மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும்.

இபபோது இடைக்கால நிர்வாகம் குறித்த வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது முழுமையான தீர்வு அல்ல. பரிசீலிக்கப்படும் தமிழர்களின் உரிமைகள் எவ்வகையிலும் கிடைக்கும் என நம்புவோம். துணிந்து செயற்படுங்கள் - என்றார். (ம-290)

## கலாசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களின் அத்துமீறல் செயற்பாடுகளால் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களுக்குப் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டன. அதுமட்டுமல்லாது ஒரு குறிப்பிட்ட நேரப் பகுதியல் சமூக கலாசார சீரழிவுகள் ஏற படுத்தப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளால் எமது இந்துப் பண்பாட்டை ஏனைய மதத்தவர்கள் எள்ளிநகையாடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்தவகையில் எமது இந்து சமயப் பண்பாட்டு விழுமியங்களையும் தமிழர் பண்பாட்டு பாரம்பரியங்களையும் ஏனையோர் போற்றும் வகையில் இவ்வருட ஆலய உற்சவத்தின்போது இளைஞர்களின் செயற்பாடுகள் அமையவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர சபைச் செயலாளர் எஸ். குலநாயகம், விடுதலைப் புலிகளின் யாழ். - நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ஐ-5-86-ரி)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையானவர்கள் நல்லூர் உற்சவத்துக்காக வருகைதந்துள்ளனா

இன்றைய கொடியேற்றத்துக்கான கொடிச்சேலை நேற்று பாரம்பரிய முறைப்படி செங்குந்த மரபு மக்களால் சட்டநாதர் வீதியில் உள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்து சித்திரத்தேரில் வைக்கப்பட்டு ஊர்வலமாக நல்லூர் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டது. (ம-10)


STUDY IN INDIA

இந்தியா Bangalore University இல் B.Sc, BCA, M.C.A. ஆகிய பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15 நாட்களுக்குள் Admission, Visa பெற்றுக் கொடுக்கப்படும். 30ஆம் திகதி University ஆரம்பமாக உள்ளதால் 5ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

யுனிவெக் (UNIVAC)
வட்டு, இந்துக்கல்லூரி வீதி,
சித்தன்கேணி.

சாருஜன் கொமினிக்கேசன்
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில்.



அருள் கொமினிக்கேசன்

எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்களே!
நல்லைக்கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இன்று மட்டும்
விசேட கட்டணத்தில்
வெளிநாட்டு அழைப்புக்கள்!

நிமிடத்துக்கு 5/= ரூபா மட்டுமே!

☛ 04.08.2003 முதலாக ஒரு நிமிட அழைப்புக்கான கட்டணம் 8 ரூபா மட்டுமே.

☎ 3536
இல. 01, பிறவுண் வீதி,
நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். (20852)



இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு
வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(28-14-16) (20981)



தவறிவிட்டது

HALOTRUST இல் பணிபுரியும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் சில்வர் கலர் செல்போன் (SAMSVNG) கடந்த சனிக்கிழமை (26.07.2003) யாழ். நகர மையப் பகுதியில் கை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் ரூபா 5000 வழங்கப்படும்.

THE HALO TRUST
655, நாவலர் வீதி,
நல்லூர்.
T.P. 021 222 3779
0777-149305

குறிப்பு:-★ [illegible]
★[illegible] (20971)






2003ஜூலையில்
தயாரிக்கப்பட்டவை
விற்பனையில்...!

RG
இரத்தினகோபால்ஸ்
65.63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6185 ☎ 0777 340056 (சி-29287) (13-17-16)



உ
விராட் விஸ்வபிரமனே நம.

நோச்சியம்பதி
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
12 ஆம் நாள் பூங்காவன உற்சவம்

அம்பிகை அடியார்களே!
காலம்: இன்று (03.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அபிஷேகமும் நண்பகல் மகேஸ்வர பூஜையும் இரவு 7.30 மணிக்கு - வசந்தமண்டப பூஜை. அம்பாள் புதிதாக வடிவமைக்கப்பட்ட விசேட வாகனத்தில் உலாவரும் காட்சியும் இடம்பெறும். விசேட நிகழ்வுகளாக கலாபூசணம் சின்னமணி குழுவினரின் வில்லிசையும் இடம்பெறும். (பொருள்- கண்ணகி திருமணம்) அதைத் தொடர்ந்து கலை நிகழ்வும் இடம்பெறும்.

- இளைஞர்கள்.

வேணுகா கொமினிகேசன்
T.P 2541, நாச்சிமார்கோவிலடி. (C29288) (32)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை நல்லதுரை (அழகுதுரை)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நல்லதுரை அவர்கள் நேற்று (02.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சிவபாக்கியம் அவர்களின் சிரேஷ்ட புதல்வரும் புஷ்பராணி (கிளி) (யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் றொபின்சன், உஷாநந்தினி, குயின்சன், சிவாநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசலட்சுமி (தங்கம்), சந்திரகுமாரி, பாலேந்திரன் (பபி), செல்வகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரரும் லக்ஷி, பிரபாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிதீபனின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (04.08.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

*6/3, விதானையார் வீதி,*
*ஈச்சமோட்டை.* (21034) (32)

## ஜோர்ச் வலன்ரைன் பீற்றர்

(ஓய்வுபெற்ற C.T.B போமன்)

அளவெட்டியைச் சேர்ந்த ஜோர்ச் வலன்ரைன் பீற்றர் 31.07.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பீற்றர் - சூசானம் ஆகியோரின் அன்புப் புதல்வனும் ஜேயமேரி, மார்டின் ஆசீர்வாதம், ஞானதிரேசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் றோசம்மாவின் அன்புக் கணவரும் லில்லி அல்போன்சா, வில்லியம், றெஜினா (ராணி), விக்ரர் (ராசா), றூபி, ஜான்சன், கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியநாயகம், பரிமளம், ஜேசுதாசன், மதுரம், மரியதாஸ், ஸ்ரெலா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜக்குலின், காலஞ்சென்ற டயஸ் மற்றும் றோய்ராஜ், வனித்தா, சதீஸ், டினேஸ், டனீஸ், றொனி, மன்நிலான் (அஜி), கல்யாணி, நிறஞ்சன், சயநதன், காலஞ்சென்ற அஜந்தன் மற்றும் நிரோஜன், டினோஜன், ஜீனு, இமமானுவேல் ஆகியோரின் பேரனும் ஜெனத், கீத், அன்ரியா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (04.08.2003) திங்கட்கிழமை காலை 9மணிக்கு அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி பூசையுடன் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

*அலுக்கை,*
*அளவெட்டி.* (21033) (38-13-17-16)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எந்த மயமும் கந்த மயமாக காட்சி தருகின்ற நல்லூர்



அடியவர் அல்லல் அனைத்துந் தவிர்த்தருளும் நல்லூர்க் கந்தன் கண்டாமணி நாதம் கணீர், கணீர் என்று அடியார்கள் செவியில் விழுகின்றது. ஒவ்வொரு நாளும் கேட்கும் மணியோசை இன்று விடியற்காலையில் ஆனந்த பரவசமூட்டும் அற்புத சக்தியுடன் கேட்பதற்குரிய காரணம் என்ன? தொல்லையே நல்லையிற் கோயில்கொண்ட முருகப்பெருமானின் மஹோற்சவம் எப்போதுவரும் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த குகனடியார் செவிகளில் நல்லூர் அசையாமணியின் நாதம் நவசக்தியுடன் புத்துணர்ச்சியுடன் நுழைவதில் வியப்பொன்றுமில்லை.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் ஆரம்பித்துவிட்டால், அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, இலங்கை முழுவதிலும் மாத்திரமல்ல, கடல் கடந்து வெளியூர்களில் வதியும் யாழ்ப்பாணத்தவர்களிடம் மாத்திரமல்ல, குகனடியார்கள் வாழும் உலகம் முழுவதிலுமே காணப்படுகிறது.

வளந்திகழ் நல்லைப்பதியிடங் கொண்டு பாரகமனைத்தும் கதிபெறு நடனங்காட்டிடு வள்ளல் என்பதற்கையமில்லை.

திருவிழா நிகழும் காலத்திலே நல்லூர்க் கோயில் பூலோக கைலாசமாகக் காட்சியளிக்கின்றது. தெருவீதிகளெல்லாம் புனித வீதிகளாக மாறுகின்றன. திருவிழா வேளையில் எந்த மயமும் கந்த மயமாகவே காணப்படுகின்றது.

### பக்தி வெள்ளம்

எல்லாவூரிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மஹோற்சவம் நடைபெறும் இருபத்தைந்து நாளும் தினந்தோறும் விரதம் அனுஷ்டித்து, திருக்கோயிலுக்குச் சென்று, அதனை வலம்வந்து, திருவிழாவிற் பங்குபற்றி, முருகன் அருள்பெற்று வீடுதிரும்பும் பக்தர்களின் தொகையையளவிட முடியாது.

ஐயா! முருகையா! பன்னிருகையா! மஹோற்சவம் நிகழும் புனித காலத்தில் உன் திருவருள் வெள்ளம் பெருகிக் கரைபுரண்டோடுகிறதென்று சொல்லி உன்னடியார் அதனைப் பருகிப் பரவசமடைந்து ஆனந்தக் கூத்தாடுகின்றனரே?

முருகனே! மாயோன் மருகனே! ஒருகைம்முகன் தம்பியே! உன் திருச்சந்நிதியில் வந்துநின்றால் பெரியார், சிறியார், இளைஞர், முதியோர், கற்றார், கல்லார், வறியர், செல்வர், நல்லார், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து, யாவரும் குகனடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை மறந்து உம்மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர்.

நல்லைப் பெருமானே! இரும்பு காந்தத்தை இழுப்பதுபோல உன் சந்நிதிக்கு அடியாரை இழுத்து அவர்களை நல்லவர்களாக்கி அருள்புரிகின்றாய். இதுநூதனமல்ல. உன்னுடன் சமர் புரியவந்த சூரபன்மனையும் கொன்றருளிய அருட்கடலல்லவா நீ?

*தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமு னுற்றால்*
*தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ! அடுசமர் இந்நாட் செய்த*
*மாயையின் மகனும்மன்றோ வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்.*

தினந்தோறும் உன் சந்நிதியிற் தரிசித்துத் தலை வணங்க இயலாதவர்கள் பிரதான திருவிழா நாள்களிலும் தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா நாள்களிலும் வந்து வழிபடுகிறார்கள். மஹோற்சவம் நடைபெறும் காலத்தில் வெளியூர்களில் உள்ள உன் அடியார்கள் தாங்கள் வசிக்கும் ஊர்களில் இருந்து கொண்டே உற்சவ விரதத்தை அனுஷ்டித்து உன்னை வழிபட்டு வருகின்றார்கள்.

மனத்தகத்தனாக எல்லாருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் வியாபகமாய் இருக்கும் புதுமையையறியாதார் யார்? நல்லைவாழ் ஆறுமுருகனின் திருச்சந்நிதியிலும் கோயில் வீதியிலும் அடியார் செய்யும் வழிபாடு அற்புதமானது. காவடி எடுப்பர் சிலர்; பாவடி தொடுப்பர்; காய் பசியடக்கி யொரு முக்காலமு மிருப்பர் சிலர்; வேல!



நல்லூர் தண்ணீர்ப் பந்தல்

முருகப்ப! பிணி காயென உரைப்பர் சிலபேர்; சேவடி துதிப்பர் சிலர்; சாமரை எடுப்பர் சிலபேர்; தீப நிரை வைப்பர் சிலர்; தூபமுறை யுய்ப்பர் சிலர்; சீரமுதளிப்பர் சிலபேர்; நாவடி படப் பிறவி வெரறு கடக்கருணை நாமமதிசைப்பர் சிலர், என்று பக்தர்கள் புரியும் தொண்டுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார் முருகபக்தியில் திளைத்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள். தாம் பாடிய நல்லூர்க் கந்தர் பதிகத்தில், நல்லை ஆறுமாமுகன் அருட்சந்நிதியில் வந்தபேர்கள் எவ்வகையான அருளைப் பெறுகிறார்கள்.

**தில்லைநட ராசனருள் சேயேயு னற்புதத்**
**திருமுன்றில் வந்த பேர்கள்**
**தீராத பிணிதீர்வ ரோரா யிரம்பிறவி**
**செய்தபா வங்க ளொழிவார்**
**எல்லையில் லாவின்ப மெய்துவார் மலடிமார்**
**இனியமக வின் றெடுப்பார்**
**இருகணுங் குருடான பேர்கள்வாள் விழிபெறுவ**
**ரில்லார் இராச ராவர்**
**சொல்லையறி யாமூடர் ஞானப்ர சங்கமழை**
**சொரிவர்நாள் கோள் துயர்கெடும்**
**துன்மரண மகலுமா லன்னுடைய பழவினைத்**
**தொடர்பறா வகையென் னையோ**
**வல்லையெனை யாளவுன் மனமினி யிரங்குவாய்**
**வளமேவு நல்லை நகர்வாழ்**
**மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே**
**மயில்வா கனக் கடவுளே.**

\- என்று பாடியுருகுகின்றார் சோமசுந்தரப் புலவர் அவர்கள்.

---

# புத்தளம் கிராமிய வங்கியில் பெரும் நிதி மோசடி அம்பலம்?

## மின்பாவனையாளர் செலுத்திய பணம் கையாடல்

புத்தளம்,ஓக.3

புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் மஸ்ஜித் வீதி கிராமிய வங்கியில் பெரும் நிதி மோசடியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் முஹம்மது பளீல் தெரிவித்தார்.

மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தைப் பாவனையாளர்கள் மேற்படி கிராமிய வங்கியில் செலுத்துவது வழக்கம். அப்பணம் தொடர்பாகவே மோசடி இடம்பெற்றுள்ளது.

பெரும்பாலான மின்சாரப் பாவனையாளர்களினால் கிராமிய வங்கியில் செலுத்தப்பட்ட மின்கட்டண நிலுவைப் பணம் மின்சார சபைக்கு அனுப்பப்படவில்லை. தாங்கள் பணம் செலுத்தியது குறித்து பாவனையாளர்கள் மின்சார சபைக்குச் செய்த முறைப்பாட்டையடுத்தே இம்மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

வங்கியில் பணிபுரிந்த காசாளர் ஒருவர் இது சம்பந்தமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பாவனையாளர்கள் செலுத்திய கட்டணங்களை மின்சாரசபைக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.3

வேலணை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வேலணை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## சிரமதானம்

மானிப்பாய் பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து எதிர்வரும் 7 ஆம் திகதி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

பிரதேச சபை அலுவலகத்திலும் அதன் உப அலுவலகங்களிலும் பணியாற்றும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அன்றையதினம் இப்பணியில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை வலி.தென்மேற்கு அரசியற்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ-10-185)

# சவூதியில் உழைத்த ரூபா 20 லட்சம் பொருள்களை இழந்த மூதூர் வாசி!

## முறைப்பாடு குறித்து பொலீஸ் விசாரணை

கொழும்பு,ஓக.3

சவூதி அரேபியாவில் மூன்று ஆண்டுகள் தொழில் பார்த்துவிட்டு இலங்கை திரும்பிய மூதூர் வாசி ஒருவர் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பறிகொடுத்திருக்கிறார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர், வாடகைக்கு அமர்த்திய வாகனத்தில் பொருள்களை ஏற்றிச் செல்கையிலேயே அவற்றை இழந்திருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து பேலியகொடை பொலீஸில் முறையிடப்பட்டிருக்கிறது.

மூதூரைச் சேர்ந்த நைனா மொகமட் ஹமீட் என்னும் இந்த நபர் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, பணம் உட்படப் பல பொருள்களை எடுத்து வந்திருக்கிறார்.

விமான நிலையத்திலிருந்து ஒரு வானை வாடகைக்கு அமர்த்தி மூதூர் நோக்கிச் செல்கையில் வான் நீர்கொழும்பு வீதியில் வைத்து பழுதடைந்தது. இதனால், வேறு ஒரு வானில் பொருள்களை ஏற்றியுள்ளார். பின்னர் தண்ணீர்ப் போத்தல் ஒன்றை வாங்க அவர் கடைக்குச் சென்றபோது வான் புறப்பட்டுச் சென்றுவிட்டது.


இச்சம்பவம் குறித்து பேலியகொடை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ)

---

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

இன்று கொடியேற்றம்



## அல்லல் அகலக் கொடியேற்று!

நல்லையிலே இன்று தமிழ் முருகன்
அல்லல் அகலக் கொடி ஏற்றுகிறான்
வடிவேலனைத் தொழு திட்டால்
கொடிய வினைகள் நீங்கி விடும்.
வள்ளி தெய்வ யானை உடன்
புள்ளி மயிலில் பவனி வந்து
அள்ளி அருள் தந்து எம்மை
அணைத்து இடர்கள் களைந்திடுவான்.

சமூகஜோதி கா.கணேசதாசன்.

## கொடியேற்றி வந்திப்போம்

*வந்திப்போம் மயிலேறி அயிலெடுத்து வரும்வேளை*
*சிந்திப்போம் மலர்த்தாளைச் சேவிப்போம். கொடி ஏற்றி*
*முந்திப்போய் நல்லூரில் முருகாவென் (று) எப்போதும்*
*சந்திப்போம் வழித்துணையாய் சந்ததமும் வந்திடுவான்.*

முருகனடியான்.

## கொடியேற்றிக் குலங்காக்கும் கந்தன்!

த்க்கெலாம் திரண்டுபோற்றும் தேவரின் தானைத்தலைவன்
தக்கனின் பேரன்தமிழின் தனிப்பெரும் தெய்வக்குமரன்
பக்கமும் பரந்தவேலன் பாடிடும் "புகழின்" வேந்தன்
பொக்கையைத் தமிழில்மோதி புறமிட வைத்த முருகன்
செக்கமாய் சிவந்தமேனி செழுந்திரு மார்பும்வேலும்
சொக்கவே மஞ்ஞைதன்னில் கற்றிடு மழகும் பொலிவும்
ஐக்கிய மாகிநல்லை அருந்திருப் பதியில்வந்த
கொற்றவா! கொடியுமேறிக் குலமெலாம் காத்து நிற்பாய்!

\- அனலையூர்ச் சேந்தன்.

## எழுகின்ற நாதமழை

ஏறுகின்ற கொடி யிருந்து
எழுகின்ற நாத மழை
மாறுடைய மனங் களையே
மாதலத்தில் மயக்கி விடும்
சீறுகின்ற சிறுமை தனைச்
சிதைத்தழிக்க வந் திடுவாய்!
கூறுமடி யார்க ளுனைக்
கூப்பித் தொழு திடுவார்.

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## கொஞ்சு தமிழ் மீண்டும் கோலோச்ச வருகவே!

குஞ்சித பாதத்தானருளிய சேயே!
குக்குடக் கொடியோனே!
குஞ்சர முகத்தானுக்கினிய குமரா!
கூர் வேலேந்தி
வெஞ்சமராடி பொல்லா பூரணை
வென்று மீண்ட முருகா!
தஞ்சமடைந்தோம் நல்லை கந்தா
தக்க துணையும் நீயே!
நெஞ்சம் நொந்து மிகவாடி
நெடுவேதனை சுமந்தது போதும்
வஞ்சகர் சேனையும் வருத்தும் துயரும்
வடுவும் மிடியும் நீங்க
செஞ்சுடர் செல்வ நின்னிரு
சேவடியைப் பற்றினோமையா
கொஞ்சு தமிழ் மீண்டும் கோலோச்ச
கொடியேறி வருகவே!

\- கந்த. தியாகராசா.

## மறவாத நினைவுடன் மறைந்த இரண்டாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



அன்னை மடியில் 07 - 09 - 1940

ஆறுமுகனின் அடியில் 26 - 07 - 2001

### அமரர் வயிரமுத்து வரப்பிரசிங்கம்

(ஓய்வுபெற்ற அஞ்சலக ஊழியர், தெல்லிப்பழை)
திதி: ஆடி பூர்வபக்க ஷஷ்டி (03.08.2003)

ஆறுதல் சொல்ல ஆயிரம் ... வந்தென்ன உங்கள் ஆருயிர்
அன்புக்கு ஈடாகுமோ அப் ... றுதல் சொல்ல உறவுகள்
வந்திதென்ன உங்கள் தி ... ங்கு காண்போம் அப்பா!
அன்பினால் அணைத்து ... ட்டில் வளர்த்து உ றவிட்டுப்
பறந்து சென்று ஆண்டுக ... டும் ஆகிவிட்டதே
பரணியிலே குஞ்சுகள் தவ ... ாம். உடலால் எமைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் ஆருயிர் எம்மை ... பிரியவே பிரியாது.
உங்கள் ஆத்மா சாந்தி ... த்திகைக் குமரன் அருள்புரிவாராக!

நி.மு.கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
த.மு.களையோடை,
கண்ணகி அம்மன் கோயிலடி
நவாலி தெற்கு, மானிப்பாய்.

...ரவிழிகளுடன் சோகம் சுமக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

(21012) (23-25-11-18)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா நாகரத்தினம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நாகரத்தினம் 01-08-2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் ந.பொன்னையாவின் அன்பு மனைவியும் சிவஞானம், அமரர் பூதப்பிள்ளை மற்றும் விசாகப்பெருமாள், அமரர் தி.சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மபாலினி, அமரர் தர்மராஜினி மற்றும் தர்மயோகினி, தர்மசாந்தினி, சாந்தகுமார், விஸ்வலிங்கம், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஞ்சன், பாலகிருஷ்ணன், ஜெயராஜ், நிருபாதேவி, நவநீதம் ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுரா, தாட்சாயினி, ஜனனி, சேயோன், நிதர்சினி, ஆரவி, பிரகாசினி, கதீபன், விதுசன், யதுசன், கண்ணா, ராஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-08-2003) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு உடையார் லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு.
T.P. 077 - 6137282

தகவல்:
P. விஸ்வலிங்கம்
(மகன்)

(21022) (23-19-11-18)

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையினரின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு பிரதேச சபை உடுவில் உப நிலைய திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ்.பிராந்தியத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (3-152)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஓக.3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக் கழகமும், சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (3-86)

✪ ✪ ✪

வர்த்தக வங்கி, இலங்கை வங்கி அதிபவர்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (3-86)

✪ ✪ ✪

தென்மராட்சி வலய முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வலய முன்பள்ளிகள உதவிக் கல்விப் பணிப்பாளர் சுபாக்கியராசா தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் குநபாலசந்திரனும் சிறப்பு விருந்தினராக மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் கு.சிவானந்தனும் கலந்துகொள்வர். (3-117)




நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு
ஆலய முன்றலில் அழகான காட்சியறை
யாழ். நகர மக்களுக்காகவே விசேடமாக
ஆரம்பிக்கப்பட்டுள்ளது!



உலகப் புகழ் பெற்ற உன்னதம் வாய்ந்த உயர்ரக
LG
அபான்ஸ் நிறுவனத் தயாரிப்புக்களை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்வதற்கு

LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-29272)



சுடர் ஒளி
விலை ரூ 16/=
ஓகஸ்ட் 10-16



சிறந்த தலைவர் பிரபாகரனே என்பதை
சுலபமாக அடையாளம் கண்ட எம்.ஜீ.ஆர்.

இடையில் விடைபெற்ற ஒப்பந்தங்களும் பிரஜா உரிமையற்ற நிலையில் மக்களும்

ஆட்சியாளரை அனுசரித்தால் ஜனநாயகம் அடக்கு முறைகளை எதிர்த்தால் பயங்கரவாதம்

பாதி வழி கடந்த புலிகளுக்கு மீதி வழி கடக்க வலியுண்டு

புலிகளுக்கு உரிமைப் பிரச்சினை அரசுக்கு கௌரவப் பிரச்சினை




கருணாநிதி-ஜெயலலிதா அயோத்தியிலும் இழுபறி

கமீலாவைக் கொன்றுவிட்டு தற்கொலை செய்ய எண்ணினார் டயானா

பிரிட்டிஷ் விஞ்ஞானியின் மரணம் பிளேயருக்கு விடுக்கும் சவால்

நாகரீகம் தெரியாத ஆள் நியமனத்தில் என்ன செய்வார்

# சில்லறைப் பாடல்!

சில்லறையே சில்லறையே சென்றஇடம் கூறு-நீ
செல்வமிடம் யாதெனினும் சொல்லிவிட்டு மாறு
"சல்" லெனுமுன் ஓசையது கேட்டுப்பல நாளு-அட
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் நீபெரிய ஆளு!

கையதுவும் உன்பரிசம் கண்டுகாலம் ஆச்சு-சட்டை
பையதுவும் நீயின்றிப் பாரமற்றுப் போச்சுசெய்யும் வழி
யேதுமின்றி சித்திரமாய் ஆனோம்-நீ
செய்து விட்ட வித்தைகளால் சித்தராகிப் போனோம்!

பாற்கடையில் தொல்லைபாண் பேக்கரியில் தொல்லை-சைக்கிள்
பார்க்கினிலும் உன்னைவிட்டால் பாதுகாப்பு இல்லை.
காற்றடிக்கப் போனால் உன்னைக்காட்டினாலே பம்ப்பு-உள்ள
கடைகளிலே எங்குமுமே காட்டுகிறாய் வம்பு!

உன்னால்தான் தீப்பெட்டி யுடன்சம்போ பவுடர்-இந்த
உடுப்புக்களை "வெளுக்க" வைக்கும் ஒருகோடிப் பவுடர்
சின்னச்சின்ன மிட்டாய்கள் சட்டைப்பின் எல்லாம்-மிக
செழுமையுடன் விற்பனையில் செழிக்குதுபார் நல்லாய்!

பஸ்ஸினிலும் சில்லறையால் பல்விதமாய் "சோலி"-மணி
பர்ஸினிலே தானிருந்தால் பாக்கட்டே காலி
விஸ்வரூப மெடுத்திட்டாய் விளங்குதுந்தன் அருமை-இனி
விளையாட்டுப் போதுமைய்யா, வெளியில் வந்தால் பெருமை!

ஏனிங்கு நீயில்லை யென்றொருநல் வாதம்-இங்கு
எழுந்தாலே எல்லோர்க்கும் புரியுமிந்தச் சேதம்
நானிங்கு பாடுகின்ற பாட்டேநம் மக்கள்-மனதில்
நாள்தோறும் எழுந்துவிடும் பொதுவான சிக்கல்!

மார்க்கந்தான் வேறேதும் இருக்குமெனப் பார்த்தேன்-கோயில்
மரத்தடியில் உனைக்கண்டு மெய்யதிர்ந்து வேர்த்தேன்
தீர்வொன்று தெரிந்ததந்தத் திருக்காட்சி கண்டு-உடனே
தேர்ந்தெடுத்தோர் இடத்தில்நான் விரித்தேனே துண்டு!

-[illegible]

# அவள்

நாற்றுக்குத் தெரியும்
அவள்
வேகத்தை.
கடலுக்குத் தெரியும்
அவள்
மன ஆழத்தை.
கவிதைக்குத் தெரியும்
அவள்
உணர்வுகளின்
உட்கிளர்ச்சியை.
எல்லாவற்றுக்கும் மேலாய்
எனக்கே
இன்று தெரிந்தது
தேசத்தில்
அவள் கொண்ட
நேசத்தை.



# "பிளாஸ்டிக்"க்கும் பொலித்தீன்களும்

வியத்தகு சாதனைகளில் புத்தியைச் செலுத்தி,
இயற்கையை இழந்து, விஞ்ஞானம் தந்ததொரு
விந்தைப் பிறப்பு "பிளாஸ்டிக்"
பொலித்தீன் வகைகள் அதன் பிள்ளைகள்.

அழகானவை, எளிதானவை.
இலகுவானவை—விலை
குறைவானவை.
ஏழைகளின் வசதிக்கேற்றவை.
காலத்தின் தேவைதானோ?—பொருள்
வர்க்கத்தின் தத்துவமோ?

"அழியா வரம் பெற்ற அற்புதப் பிறப்புக்கள்"?
எரிக்கவும் முடியாது—எரித்தால்
விண், வளி மாசுறும்.
புதைக்கவும் முடியாது—புதைத்தால்
மண்ணகம் மாசுபடும்.

"மண்மகள் கூட இவற்றை மறுதலிக்கின்றாள்"
குவிக்கவும் முடியாது—குவித்தால்
நுளம்புகள் பெருகிவிடும்.
என்ன செய்யலாம்?

பயன்பாட்டைக் குறைத்திடின்
பிறப்புக்களைக் குறைத்திடலாம்—பிறந்தவைக்கு
புனர் ஜென்மம் கொடுத்துவிடின்
இயற்கையும் தூய்மை பெறும்.
"இயற்கையை மனிதன்
இயற்கையாய்ப் பாவித்தால்,
இன்பங்கள் பெருகும்."

-கந்தையா
முருகதாசன்

# யாரொடு நோவது?

எல்லோ ரிடத்திலும் செல்போனும் ரெலிபோனும்
நல்லதென்று எண்ணினோம் நாற்ற மடிக்குதே
வீடியோ சீடி விதவிதமாய் வந்து
வீட்டி னில் படிப்பின்றி வேதனையாய்ப் போச்சு
காட்சியைப் பார்த்திட கண்கூசு கின்றது
கலாசாரச் சீரழிவு கச்சித மாகுது
வெண்கூட்டு விஸ்கி வெளிநாட்டுக் குடி வகை
தம்மடித்து நாமழிய தாராள மாச்சு
காதல் பிசாசென்றும் கட்டிப் பிடி யென்றும்
காதைப் பிளக்குது கடைத்தெரு வெங்கணும்
பாவம் எம்சந்ததி பாழ்பட்டுப் போகுது
யாரொடு நோவது? யார்க்கெடுத் துரைப்பது?

-கவிமணி க. ஆனந்தராசா

# கவிதைக் கணங்கள்



# வெல்லத் தமிழினிச் சாகுமோ...?!

பாறை வயதிலும் கூடிய பாவை
பருவம் இன்னமும் இருபதின் இளமை
கன்னல் மொழியை
கருவில் சுமந்த பெருமை - இன்று
உனக்குள் புற்றின் நிலைமை!
முதுமையை அரணாக்கி ஔவையில்
இளமையாய் நீ வளர்ந்தாய்
பொதிகையில் தென்றலாகி
அகத்தியன் குடிலிலே மெல்லிசைத்தாய்.
வள்ளுவன் இதழ் வெளிக்குள்
'வரலாறு மறக்காத' நடனமிட்டாய்.
மெல்லியளே....; மேனியை
ஏன் துரும்பாக இழைக்க வைத்தாய்?!
மேருவில் கொடி நாட்டி
மேதினியை வலம் வந்தாய்;
பாரினில் பல மொழிகள்
வெளிக்கிளம்ப .'வேர்' கொடுத்தாய்;
எந்த ஊருக்கும் பேரின்றி
ஏன் இன்று மௌனியானாய்?!
காவிய உடையணிந்து;காப்பிய
நகைபுனைந்து
தேவதையாயிருந்தவளே....! கச்சையுமின்றி
பெரும் கர்ச்சனைகளுள் நடுங்கி
கண்ணீரில் நீந்தும் காலத்தில் ஏன் கலந்தாய்?!
உன்னையணிந்து நிமிர்ந்த பரம்பரை
கம்பியெண்ணுகிறது உன் கருவழிவந்ததால்;
எழில் மிகு உன்னுரு... உருகுது
அந்நிய மொழியெலாம் பருகி...!
கல் தோன்றி மண் தோன்றா
காலத்துப் பழைமையே;
தொடுவான எல்லைகளில்
தொலைந்திருக்கும் புதுமையே;
'நிலைக்குமென்று' எதுவுமில்லை
'நீ தவிர' என்றிருந்தோம்
அந்நிய மொழியலைக்குள்
அமிழ்ந்து போனாயே...!
வெல்லத்தமிழே...! நீ
மெல்லச் சாவாயோ- இல்லையேல்
எல்லையெலாம் கிளர்ந்து
ஏழுலகும் நிறைவாயோ?!

-நிலா



# விழித்தெழு பெண்ணே..

மூட்டைப் பூச்சிகளாய்
வீட்டுக்குள்
முடங்கி வாழும் பெண்மையே...
சிறு கோட்டை விட்டு
வெளியே வா...
வேட்டைப் பற்களுக்கு
உன்னை
விருந்து போட்டது போதும்
பூட்டை உடைத்து வா...
பூவுலகில்
புதுமைகள் புனைவதற்கு.

இமைக்குள் மட்டும் தான்
உலகென்று நினைக்காதே
விழிகளைத் திறந்து பார்
வியனுலகு — உன்னை
வியந்து சிரிக்கும்
இனியும்
பயந்து போர்வைக்குள்
பதராய் வாழாதே....
வாழ்க்கைகள் சிதைந்த பின்பு
சிகைக்கு மட்டும்
பூ எதற்கு...?

கறுப்புப் பொட்டிட்டு
கண்ணாடி முன்னின்று
காலங்கள் கழித்தது
போதும்
உடுத்திய சேலைகளை
மடித்து வைத்துவிடு
உன் தங்கைக்கு
அவளாவது — அதை
அர்த்தமுடன் அணியட்டும்....
அதற்கு
வழிசமைக்க நீ வா....

-வளாய்
செல்வகுமார்



## கூட்டுறவு விழா

யாழ்ப்பாணம், ஓக.3

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின கொத்தணியும் அங்கத்துவ சங்கங் களும் இணைந்து நடத்தும் கூட்டுறவு தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமையில மானிப்பாயில் உள்ள கொத்தணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக தமிழீழ நிர்வாக சேவையின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-10)

## தங்க நகைகள் திருட்டு

வளலாய், ஓக.3

அச்சுவேலி, பத்தமேனிப் பகுதி யில் உள்ள வீடொன்றில் இருந்த பதினேழரைப் பவுண் பெறுமதியுடைய தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து பத்தமேனியில் வசித்து வந்த தநவரத தினம் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது. (ஒ-10-178)

## கலந்துரையாடல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் கோட்ட மகளிர் அரசியற் துறை பொறுப்பாளர் சி.வசந்தி தலை மையில் 'பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 1.00மணிக்கு, சித் தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலத் தில் நடைபெறவுள்ளது. (ஒ-29)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பழை,ஓக.3

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் நிறுவுநர் தின மும் பரிசளிப்பு விழாவும் அதிபர் க.செல்வக்குமரன் தலைமையின் கீழ இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி பு.ஆதவன் கலந்து கொள்ள வுள்ளார். (ஐ-150)


# பணிநிலை வேண்டுகை

மனிதவள மேம்பாட்டுப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.08.2003 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

## பணிநிலைகள்

01. ஆளுகை மேலாளர்
02. கணக்காய்வாளர்
03. கணக்குப்பதிவாளர்
04. காசாளர்
05. களஞ்சியக்காப்பாளர்
06. மேற்பார்வையாளர்
07. எழுதுநர்
08. பாதுகாப்புப் பணியாளர்
09. சிற்றூழியர்

## கல்வித்தகமை

**பணிநிலை 1, பணிநிலை 2 :**
ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகப்பட்டப்படிப்பு அல்லது உயர்தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த(உ/த) உடன் ஐந்தாண்டிற்குக்குறையாத துறைசார் பட்டறிவு

**பணிநிலை 3 தொடக்க்ம் 7 வரை**
க.பொ.த (உ/த) அல்லது க.பொ.த(சா/த) உடன் மூன்றாண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு

**பணிநிலை 8, பணிநிலை 9**
க.பொ.த(சா/த) அல்லது ஓராண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
வருவாய்ப்பகுதிச்செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு**

11.08.2003 காலை 9 மணிக்கு நடைபெறும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்
வருவாய்ப்பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

குறிப்பு :
1. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.

ஆளுகை,
மனிதவளமேம்பாட்டுப்பகுதி, நிதித்துறை.

DMV


# சின்னமடு அன்னை யாத்திரைத்தல திருவிழாச் சிறப்பிதழ் 05.08.2003



## யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

சின்னமடு யாத்திரைத் தல திருவிழாவையொட்டி உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தீவுப் பகுதியில் அமைந்துள்ள சின்னமடு அன்னையின் யாத்திரை ஸ்தலமானது யாழ் மறைமாவட்டத்தின் பிரசித்திபெற்ற யாத்திரை ஸ்தலமாக விளங்கி வருகின்றது. சில வருடங்களுக்கு முன்பு பாழடைந்து மிகவும் மோசமான நிலையிலிருந்த இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புத்தம் புதிய கூரை, பக்கச் சுவர்கள், திருச்சுருப பீடப்பகுதி என்பன சீரமைக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்டுள்ளது. திருநாட் காலங்களில் திருப்பலி நிறைவேற்ற வசதியாக போட்டிக்கோ மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கு அதிக யாத்திரீகர்கள் வந்து வழிபட்டுச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

மருதமடுத்தாய் சிங்களவர்கள் தமிழர்கள் அனைவர்க்கும் தாயாக நின்று அனைவரையும் அன்புடன் அரவணைத்து அருள்மழை பொழிந்து வருகிறாள். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தேசிய ரீதியான செயல்பாட்டில் மருதமடு அன்னையின் திருச்சுருவம் தென்னிலங்கைக்கு பவனியாக எடுத்துச் செல்லப்பட்ட பின்பே இலங்கை மண்ணில் அமைதியும் சமாதானமும் தோன்றியது. தமிழர்களையும் அவர்களது பிரச்சனைகளையும் பற்றி இறுக்கமான மனது கொண்ட சிங்கள மக்கள் பலர் இந்த அன்னை தன் பவனியின்போது பொழிந்த அருள் மழையால் மனம் மாறி சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பன இம் மண்ணில் மலர இடம் கொடுத்தார்கள்.

சின்னமடு அன்னையை துன்ப காலங்களில் மட்டுமல்ல இன்ப நேரங்களிலும் போர்க் காலங்களில் மட்டுமல்ல சமாதான நேரங்களிலும் போற்றி புகழ்ந்து பாடவேண்டும். நமது தேவைகளுக்காக எப்போதும் அன்னையின் பதி நாடி வேண்டுதல் செய்ய வேண்டும்.

அன்னைக்குரிய அன்போடும் அரவணைப்போடும் சமாதானத்தில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல் நிலைகள் நீங்கி நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை ஏற்படுத்தித் தர சின்னமடு அன்னையிடம் வேண்டுதல் செய்வோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ் ஆயர்**

## சின்னமடு யாத்திரைத்தல பரிபாலகரின் ஆசிச் செய்தி

இவ்வுலகில் ஒரு தாயினுடைய அன்பும் அரவணைப்பும் எப்போதும் எமக்கு அவசியமானது. அத்தாயின் அன்பும் அரவணைப்பும் எமக்கு நிறைவாக கிடைக்கின்ற போது நாம் பிள்ளைகளுக்குரிய பாசத்துடன் எந்தவித அச்சமுமின்றி அத்தாயை நாடிச் சென்று எம் தேவைகளை வேண்டி நிற்கிறோம். அத்தாயும் அவற்றை நிறைவு செய்கிறாள்.

சின்னமடு அன்னை நம் அனைவருக்கும் ஒரு விண்ணகத் தாயாக விளங்குகிறாள். அத்தாயின் அன்பையும் அரவணைப்பையும் நாம் பெற்றுக்கொள்கின்றபோது எமது வேண்டுதல்களையும் தேவைகளையும் சமர்ப்பித்து நிறைவு பெற அந்த அன்னையின் பதி நாடி வருகிறோம்.

யாழ் மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற 109 ஆண்டு கால பழமைவாய்ந்த சின்னமடு செபமாலைமாதா யாத்திரைத்தலம் கடந்த கால போரின் அழிவுகளின் பின்னர் கட்டிட ரீதியாக கட்டி எழுப்பப்பட்டு அங்கு வரும் பக்தர்களுக்கு ஆன்மீக ரீதியாக அருள் வளம் பொழிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. புதுமெருகு பெற்று அழகுறக் காட்சி தரும் சின்னமடு அன்னையின் யாத்திரைத்தல திருவிழா இவ்வாண்டு ஆவணி மாதம் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட இருக்கிறது. பக்தர்களின் வசதி கருதி பிரயாண ஒழுங்குகள், தங்குமிட வசதி எனப்பல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நாட்டு நிலைமைகள் அமைதியாக இருக்கின்ற படியால் அநேக பக்தர்கள் இம்முறை அன்னையின் பதிநாடி வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

முதல் திருப்பலி காலை 6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். திருநாள் திருப்பலி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை தலைமையில் காலை 8.30 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரும் திரண்டு வந்து அன்னையின் அருள் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**அருள்திரு இராஜேந்திரம் ஸ்ரலின்**
**பரிபாலகர்.**

## 109 ஆண்டு நிறைவு

## காணும் பழம் பெருமை மிக்க சின்னமடு யாத்திரைத்தலம்

யாழ் மறைமாவட்டத்திற்கு சொந்தமான பிரசித்தி பெற்ற யாத்தி ரைத் தலங்களுள் ஒன்றான சின்ன மடு செபமாலை மாதா யாத்திரைத் தலம் இவ்வாண்டு 109 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. சின்னமடு செப மாலை மாதாவின் ஆலய வரலாற்று கைநூலொன்று 1962ஆம் ஆண்டு காவலூர் கவிஞன் ஞா.ம.செல்வரா சாவினால் எழுதப்பட்டுள்ளது. அப்போ ஊர்காவற்றுறை பங்குத் தந்தையாயிருந்த சுவாமி ஞானப் பிரகாசர் அந்நூலுக்கு மதிப்புரை எழுதியுள்ளார். அவர் தமது மதிப் புரையில் 1895ஆம் ஆண்டு ஆடி மாதம் 14ஆம் திகதி ஒரு சிறு கொட்டில் கோவிலில் முதல் திருப்பலி நிறை வேற்றப் பட்டதென வரலாறு கூறுகிறதென தெரிவிக்கின் றார். இருப்பினும் அதற்கு முன்னரே அங்கு கிறிஸ்த வர்கள் வாழ்ந்தார் கள் என்பதற் கான சான்று கள் இருப்பதாகவும் அவர் தெரிவித துள்ளார்.

1895ஆம் ஆண்டை கணக்கிலெடுத்து 1994ஆம் ஆண்டு சின்னமடுப் பதியின் நூற்றாண்டு விழா இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தீவுப் பகுதி முழுவதற்கும் பொறுப்பாக இருந்தபோது கொண்டாடப்பட்டு இருக்கிறது. தீவுப் பகுதி மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த நிலை யில் மற்றைய மக்கள் அங்கு செல்ல முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை யில் நூற்றாண்டு விழா மிகமிக அமை தியாக கொண்டாடப்பட்டிருக்கிறது. அவ்வேளையில் காவலூர் கவிஞன் ஞா.ம.செல்வராசாவினால் எழுதப்பட்ட கைநூல் இரண்டாம் பதிப்பு செய்யப் பட்டிருக்கிறது.

சின்னமடுப் பதியின் ஆரம்ப கால சரித்திரத்தை நோக்குகின்றபோது விஸ்திரினி சுவாமிகள் தீவுப் பகுதி பொறுப்பாளராக இருந்தபோது உரு வாக்கிய ஆரம்ப கத்தோலிக்கர் நாள டைவில் ஞான வழிகாட்டிகள் இல்லா மையால் வேதக் கடமைகளை அனு சரிக்காமலும் கிறிஸ்தவ வாழ்வு வாழா மலும் போயிருக்கிறார் கள். சந்திர சேகர சுவாமியார் தீவுப் பகுதியினை பொறுப்பேற்றபோது இந்த உண மையை அறிந்தும் உணர்ந்தும் அவர் களுடைய விசுவாசத்தை பாதுகாக்க விரும்பி சரவணை கிராமத்தில் 1894 ஆம் ஆண்டு ஒரு பாடசாலையையும் ஆலயத்தையும் அமைக்க முயற்சி களை மேற்கொண்டுள்ளார். இதுவே ஆலயத்தின் ஆரம்ப வரலாறாகும். ஆலயத்திற்கென கொட்டில் அமைக கப்பட்டு ஊர்காவற்றுறை புனிதயாகப்பர் ஆலயத்திலிருந்த செபமாலை மாதா சுருபம் அங்கு கொண்டு சென்று வைக்கப்பட்டது. முதற் திருப்பலி 1895ஆம் ஆண்டு ஆடி மாதம் 14ஆம் திகதி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் தீவுப் பகுதி மக்களால் மட்டுமே திருவிழாக் கொண்டா முடிந்தது. இதன் பின்னர் சில்லாலை, இளவாலை, பண்டத்தரிப்பு, நாவாந் துறை, யாழ்ப்பாணம் போன்ற இடங் களிலிருந்தும் மக்கள் பவனி பவனியாக திருயாத்திரை வரத் தொடங்கினார்கள். காலகதியில் பெரிய மடுவிற்கு வண்டில் கட்டி செபங்களையும் பாடல்களையும் பாடிக்கொண்டு செல்கின்ற ஒரு நிலைபோல் இங்கும் ஏற்படலாயிற்று. இதனால் இது சின்னமடு என அழைக்கப்படலாயிற்று. போரின் அழிவுகளாலும் அனர்த்தங்களாலும் ஆலயம் சேதமுற்ற நிலையில் தற்போது ஆலயம் புனரமைக்கப் பட்டு புது மெருகுடன் காட்சி தருகிறது. போராட்ட காலங்களில் போக்குவரத்து பிரச்சினைகளும் கெடுபிடிகளும் இருந்ததினால் சில வருடங்களாக அங்கு செல்லமுடி யாதிருந்த மக்கள் இத்தடவை மகிழ்வோடு அங்கு வந்து திரு விழாவை கொண்டாடவுள்ளனர். சின்னமடு அன்னை தன்னை நாடி வரும் அனைவருக்கும் அருள் வரங் களை அன்போடு அள்ளி வழங்கும் அன்னையாக விளங்குகின்றாள். எமது மண்ணில் சிலகாலமாக தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் திரும்பவும் ஆரம்பிக் கப்பட்டு சுமுகமான ஒரு முடிவி னைக் காண சின்னமடு அன்னை அருள்பாலிப்பாளாக.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**